போது ... 04 MAR 1999 மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# உதயன்

04 MAR 1999 மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 20 வியாழக்கிழமை (04-03-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 83

# மாகாண தேர்தல் திகதியை மாற்ற அரசாங்கம் தீர்மானம்

## புத்தாண்டுக்கு முன் ஜி.சீ.ஈ. முடிவுகள்

கொழும்பு, மார்ச் 4

கடந்த டிசெம்பர் மாதம் நடந்த ஜி.சீ.ஈ. (சாதாரண தரப்) பரீட்சை முடிவுகள் தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் வெளிவரும் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்தது.

இந்தப் பரீட்சையில் 5 லட்சம் மாணவர்கள் தோற்றியிருந்தனர். [இ-3-10]

## 1,408 பேர் காங்கேசனில் இதுவரை தடுத்துவைப்பு

### பெயர் விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

குடாநாட்டில் 96 ஆம், 97 ஆம் ஆண்டுகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட ஆயிரத்து 408 பேர் காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு முகாமில் வைத்துப் பராமரிக்கப்பட்டனர்.

சட்டரீதியான முறையில் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட இவர்கள் அநுராதபுரம் சிறைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்டுள்ள அறுவர் பற்றிய விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்ட ஆறு பேர் காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ கந்தசாமி சுதாகரன் (வயது 18)—கச்சாய் தெற்கு கொடிகாமம்.

★ மகாலிங்கம் ரவீந்திரன் (வயது 25) — கோப்பாய் மத்தி, கோப்பாய்.

★ தெய்வேந்திரன் யசோதரன் (வயது 23)— பலாலி வீதி, திருநெல்வேலி.

★ இலங்கநாதன் கஜேந்திரன் (வயது 23) — ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி.

★ சங்கிலித்தேவர் சண்முகலிங்கம் (வயது 23) — சிவன் கோயில் வடக்கு, யாழ்ப்பாணம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரயிலில் குண்டு வெடிப்பு!

கொழும்பு, மார்ச் 4

மருதானையில் இருந்து பாதுக்கை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலின் பெட்டி ஒன்றில் நேற்று முன்தினம் இரவு 11-05 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது.

மருதானையில் இருந்து நாரஹேன்பிட்டி ரயில் நிலையத்தை அண்மித்துக்கொண்டிருந்த இந்த ரயில் நாரஹேன்பிட்டி பொலீஸ் வாகனத் தரிப்பிடத்துக்குச் சமீபமாகச் செல்லும் போது திடீரென ரயிலின் பின்பெட்டியில் குண்டு வெடித்ததாகக் கூறப்பட்டது.

குண்டு வெடித்ததால் அந்தப் பெட்டிக்குச் சேதம் ஏற்பட்டது.

இதனால் 60 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து நாரஹேன்பிட்டிப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (இ-3-6-7)

## நெல்லியடிச் சம்பவம்

## ஏனையோரையும் கைது செய்ய உத்தரவு!

வடமராட்சி, மார்ச் 4

நெல்லியடியில் உள்ள வீடு ஒன்றின் மலசலகூடக் குழியிலிருந்து மீட்கப்பட்ட கரவெட்டி கன்பொல்லையைச் சேர்ந்த இராசரத்தினம் இராஜேஸ்வரன் என்பவரின் தலையற்ற உடல் தொடர்பாக சம்பந்தப்பட்ட ஏனையோரையும் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு பருத்தித்துறை பதில் நீதிவான் ஏ. கே. நடராசா நெல்லியடிப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக புளொட் இயக்கத்தின் நெல்லியடிப் பொறுப்பாளர் கோபு நெல்லியடிப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே நெல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் நீதிமன்றத்தில் நேற்று மனு தாக்கல்

கொழும்பு, மார்ச் 4

ஏப்ரல் முதலாம் திகதி நடைபெற உள்ள மாகாணசபைத் தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது என்று தெரிய வருகிறது. தேர்தல நடைபெறும் திகதியை மாற்ற அனுமதி தருமாறு கோரி சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை நேற்று மாலை தாக்கல் செய்தார்.

பிரதம நீதியரசர் டி. பி. எஸ். டி. சில்வா, நீதியரசர்களான மார்க் பெர்னாண்டோ, டி. பி. எஸ். குணசேகர ஆகியோர் கொண்ட குழு இந்த மனுவை ஆராய்ந்து நாளை இது தொடர்பான தீர்ப்பைவழங்கவிருக்கின்றது.

தேர்தல் ஆணையாளர் சார்பில் சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் "தற்போது தேர்தல் நடத்த அறிவிக்கப்பட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணத்தில் இருந்து வட்டுக்கோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று நேற்றுமாலை 5.45 மணியளவில் பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளானது.

நவாலி வடக்குப் பகுதி ஊடாக இந்த பஸ் சென்று கொண்டிருந்த சமயம் குறுக்கே மாடு ஒன்று ஓடியதாகவும்—

வீதியில் கிடந்த மண்மேட்டுக்கு மேல்பஸ்ஏறி பனைமரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் மூவர் காயமடைந்தனர்.

பஸ்ஸுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. (இ-3-185)

முச்சந்தி ரோனி



முதலில் இயலாது எண்டினம், இப்ப இறங்கி வருகினம்...!

## கத்தோலிக்கர் சார்பில் நாளை மனுத் தாக்கல்

கொழும்பு, மார்ச் 4

தெற்கு மாகாணசபைகளுக்கான தேர்தல் கததோலிக்க மக்களின் புனித நாளில் நடத்துவது தமது அடிப்படை உரிமையை மீறும் செயல் எனத் தெரிவித்துக் கத்தோலிக்க மக்கள் சார்பில் நாளை உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்படவுள்ளது.

குரு முதல்வர்களான பினாஸ்டிஸ் டி சில்வா, கிங்ஸ்லி ஜே. விக்கிரமரத்தின, கிங்ஸ்லி ஜெயமான்ன ஆகியோர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தனர்.

மாகாணசபைச் சட்டம், உயர்நீதிமன்றத் தீர்ப்பு ஆகியன தேர்தலைப் பின்போடுவதை தடுக்குமாயின் மார்ச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர பயணிகள் கப்பல் சேவை மே மாதத்தில் ஆரம்பிக்கப்படலாம்

கொழும்பு, மார்ச் 4

காங்கேசன்துறைக்கும், திருகோணமலைக்கும் இடையில் எதிர்வரும் மே மாதம் முதல் நிரந்தர பயணிகள் கப்பல் சேவை நடத்தப்படவிருக்கின்றது.

வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

காங்கேசன்துறைக்கும், திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை நடத்த வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சுக்கள் நடத்தி வருகின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை மேலும் தாமதமாகும்

### இனி 21 ஆம் திகதியே

யாழ்ப்பாணம், மார்ச் 4

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் லங்கா முடித்த கப்பல் மூலம் பயணிகள் சேவை நடத்துவது தாமதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும், ஒருதொகுதி பஸ்களையும் ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் இக்கப்பல் வடக்கு நோக்கிப் புறப்பட்டுள்ளது என்றும்—

காங்கேசன்துறையில் பொருள் இறக்கிமுடிக்க பெரும்பாலும் 18 ஆம் திகதிக்கு மேல் செல்லும் என்றும் —

இந்தக்கப்பல் நடத்தவுள்ள மூன்று சேவைகளில் முதலாவது சேவை 21 ஆம் திகதி மட்டில் காங்கேசனில் ஆரம்பிக்கும் என்றும்— வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## கல்வி நிர்வாக சேவைக்கு 78 பேர் நேற்று நியமனம்

திருகோணமலை, மார்ச் 4

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 78 பேர் கல்வி நிர்வாக சேவைக்கு நியமனம் பெற்றுள்ளனர்.

மாகாணக் கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற வைபவம் ஒன்றில் வைத்து வடக்கு - கிழக்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா இவர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கினார்.

இவர்களில் 64 பேர் தமிழர்கள். 14 பேர் சிங்களவர்

[10 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 குளங்களை இவ்வாண்டு புனரமைக்க 'கெயர்' உதவும்

யாழ்ப்பாணம், மார்ச் 4

'கெயர்' நிறுவனத்தினால் மேலும் 12 குளங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இவ்வாண்டுக்கான திட்டத்தின் கீழ் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மேற்படி நிறுவனத்தினால் 18 குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன. பணற் பாங்கான பகுதிகளிலுள்ள குளங்களே கடந்த வருடம் புனரமைக்கப்பட்ட குளங்களாகும்.

சாவகச்சேரி, பளை, சங்கானை, வடமராட்சி, உடுவில் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 18 குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் புனரமைப்புச் செய்யப்படவுள்ள குளங்களைத் தெரிவு செய்வது தொடர்பாக கமநல சேவை அதிகாரிகளுடன் 'கெயர்' நிறுவன பிரதிநிதிகள் கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளனர். (ஐ-5)

## மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் தண்ணீர் விநியோகம் சீரில்லை!

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் தண்ணீர் விநியோகம் சீராக இல்லாததால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

குழாய் மூலமான தண்ணீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதால் தேவையான வேளைகளில் தண்ணீரைப் பெற முடியாது நோயாளர்கள் அவதியுறுகின்றனர்.

தற்போது மின்சார வசதிகள் இருந்தும் சீரான முறையில் தண்ணீர் விநியோகம் செய்யப்படாமை குறித்து நோயாளர்கள் அதிருப்திதெரிவித்துள்ளனர். (இ-118)

## கீரிகள் தொல்லை

ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதிகளில் கீரிகளின் தொல்லை அதிகரித்துவருகிறது. கோழிகளை கீரிகள் பிடித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-139)

## ஆய்வுகூடம் மூடியதால் நோயாளர் பெரும் சிரமம்

தென்மராட்சி, மார்ச் 4

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த ஒரு வருடமாக ஆய்வுகூடம் மூடப்பட்டுள்ளதால வெளி நோயாளர்கள், வார்ட் நோயாளர்கள், கிளினிக் நோயாளர்கள் ஆகியோர் தமது தேவைகளுக்கு யாழ்ப்பாணம் தனியார் ஆய்வு கூடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது

இங்கு கடமையாற்றிய ஆய்வுகூட பரிசோதகர் ஓய்வு பெற்றுச் சென்று ஒரு வருடமாகியும் வேறு ஒருவர் இன்னும் நியமிக்கப்படவில்லை. (இ-117)

## சமய சந்நிதியில்

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கிருஷ்ண பக்கச் சதுர்த்தி திருவிழா விசேட அபிஷேகம், பூசை, ஆராதனையுடன் நடைபெறும். (இ 30)

## யோகாசன வகுப்பு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தினமும் காலையில் யோகாசன வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

ஆண், பெண் இருபாலாரும் இந்த வகுப்புகளில் கலந்து கொள்கின்றனர்.

## பரிசளிப்பு விழா

வலி கிழக்கு, மார்ச் 4

கோப்பாய் ஐக்கிய விளையாட்டு கலாசாரக் கழகத்தினரால் அண்மையில் நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியின் பரிசளிப்புவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்குக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக் கலையரங்கில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

## செஞ்சிலுவை கப்பலில் மருந்து வகைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ் போதனா வைத்தியசாலையின் பாவனைக்குரிய இந்த ஆண்டு முதல் காலாண்டுக்குரிய மருந்து வகைகளில் சில நேற்று வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் சேவைக் கப்பலில் எடுத்துவரப்பட்டன.

இதேவேளை யாழ் குடாநாட்டுக்கான தபால் பொதிகளும் இந்தக்கப்பலில் எடுத்து வரப்பட்டன. (இ-15)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரியின் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேஸ்வரன் தலைமையில் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார். திருமதி ஸ்ரீசிவராசா பரிசில்களை வழங்குவார். (இ-173)

★ ★ ★

மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வியாழன் பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் நா. சிவசோதி தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜாவும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி நிர்வாக உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. கணேசனும் வைத்திய கலாநிதி பே. பிலிப்ஸும் கலந்து கொள்வர். [இ-31]


**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
பாலச்சந்தரின் குடும்பச்சித்திரம்
**கையளவு மனசு**
05-03-99 வெள்ளிக்கிழமை முதல் 07-03-99 ஞாயிற்றுக்கிழமை வரை காலை 10.30 க்கும் பிற்பகல் 2.30 க்கும் முதற்பாகம் காண்பிக்கப்படும்.
மிகுதிப் பகுதி தொடர்ந்து வரும் தினங்களில் காண்பிக்கப்படவிருக்கின்றது. விபரம் தினமும் உதயன் பத்திரிகையில் இரண்டாம் பக்கத்தில் பிரசுரமாகும்
★ முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.
(63582)

இணுவில் காயத்ரீபீடத்தில்
**சிவாசார்யாபிஷேகம்**
ஆசார்யாபிஷேகம் பெறுபவர்:
**பிரம்மஸ்ரீ கு. கேதீஸ்வரகௌரிபால சர்மா**
—நீலியம்பனை பிள்ளையார் கோயில்—
முகூர்த்த நேரம் நாளை 5-3-99 வெள்ளிக்கிழமை காலை 7-03 மணிமுதல் 8-03 மணிவரை
தீட்சாகுரு சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்
வரவேற்புபசாரம் 4-00 மணிக்கு நடைபெறும்.
மணியகாரன் லேன், கொக்குவில் (63617)

வருடாந்த ஆன்மீக புத்துயிர்ப்பு
**நற்செய்தி விழா**
இடம்: மெதடிஸ்த திருச்சபை, கட்டைவேலி, கரவெட்டி.
காலம்: வெள்ளி 05-03-1999 மாலை 3 30 மணி
நேரம்: பிற்பகல் 3 30 இணைந்து பாடுவோம்! இன்னிசை கானங்களால் புகழ்வோம்!
பிற்பகல் 4.30 - அருள் வாக்கு
பிற்பகல் 5.30 - இணைந்து ஜெபித்திடுவோம்!
அருளுரையாளர்;
அருட்திரு J. விவேகநாதர்
(முன்னாள் மறை மாவட்டத் தலைவர், வட - கிழக்கு மறை மாவட்டம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வாரீர்! இறை ஆசீர் பெற்றிடுவீர்!
செயலாளர்,
யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்.
சேகர கண்காணிப்புக் குரு,
மெதடிஸ்த திருச்சபை,
பருத்தித்துறை - கட்டைவேலி சேகரம். (63614)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று
விஜயகாந்த், ரூபினி
நடித்த
ஆனஸ் ராஜ்
காட்சிகள் 10.30, 2.30
(பழைய நேரம்)
T. P No 070-212223
(63520)

**ராஜா**
யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
அஜித் - தேவயானி
ஹீரா - மணிவண்ணன்
கரன் நடித்த
**காதல் கோட்டை.**
இன்று காட்சிகள்
10-30, 2-00,
நாளை முதல்
கார்த்திக் - தேவயானி
ரசிகா, அஞ்சுஅரவிந்த்
மற்றும் பலர் நடித்த
**உதவிக்கு வரலாமா**
(சி/6661)

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
3 ஆவது வெற்றிவாரமாக
கார்த்திக் - ரம்பா
கவுண்டமணி
நடித்த
**உள்ளத்தை அள்ளித்தா**
புதிய நேரப்படி காட்சிகள்
11-00, 2-30
(63613)

பல பெற்றோரின்
வேண்டுகோளுக்கு
இணங்க
அரியாலையில்
கணக்கீடு
**A/L 2001**
திரு. S.D.J சுதர்ஷன்
ஆரம்பம்: 05-03-99
வெள்ளி 4 மணி (ப. நே)
**றூபா அக்கடமி**
கனகரட்ணம் வீதி
அரியாலை.
(63598)

எமது ஐங்கரன்
வீடியோ
வெளியீடுகள்!
என் மகன்
நீதி
பந்தம்
எங்கிருந்தோ வந்தாள்
நீலமலைத் திருடன்
உள்நாட்டு, வெளிநாட்டு
தொலைத்தொடர்பு
சேவைகளுக்கு
**நரேன் வீடியோ அன்ட் கொமினிக்கேசன்**
140, பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம்.
Tel. 021 - 2675
(சி/6671)

**WANTED**
Book Keeper with minimum five years experience.
Apply before 10 - 03 - 99
Euroville,
866, Point Pedro Road,
Nallur, Jaffna.
(63612)


**ஆத்மாஞ்சலி**

சங்கரத்தையூரைச் சேர்ந்தவரும்
மூதவை உறுப்பினரும்
சைவவித்தியா விருத்திச் சங்கத் தலைவரும்
கரந்தை குளவத்தை
முருகன் ஆலய பரிபாலன சபைத் தலைவருமான
அமரர் S. R. கனகநாயகம்
அவர்களின் பாரியார்
**திருமதி சத்தியம்மா கனகநாயகம்**
அவர்களின் ஆன்மா இறைநீழலில் இன்புற்றிட பிரார்த்திக்கின்றோம்.
பரிபாலன சபையார்
முருகன் கோயில் சங்கரத்தை
(63615)

**கண்ணீர் அஞ்சலி**

மாசார் அ.த.க. பாடசாலை
ஓய்வுபெற்ற அதிபர்
**S.K.T. சிதம்பரப்பிள்ளை**
அவர்களின் மறைவைக் கேட்டு ஆறாத்துயரும் அதிர்ச்சியும் அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள்.
மாசார்,
பளை.
(63618)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடித் தடை உடன்படிக்கை திங்கள் முதல் அமுலுக்கு வந்தது

லண்டன், மார்ச் 4

கண்ணிவெடிகளைத் தடை செய்யும் ஒட்டாவா ஒப்பந்தம் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளது.

கண்ணிவெடிகளைப் பாவிப்பதற்கு எதிராகப் பிரசாரம் செய்து வருபவர்கள் அளிக்கின்ற தகவலின்படி சர்வதேச ரீதியாக உலகின் பல நாடுகளிலும் 100 மில்லியனுக்கு மேற்பட்ட கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்காவின் அங்கோலா, மொசாம்பிக், சோமாலியா, எகிப்து, ருவாண்டா போன்ற நாடுகளில் 50 மில்லியன் கண்ணிவெடிகளும், மத்திய கிழக்கில் குர்டிஷ் இனத்தவர் வாழும் பகுதிகளிலும் குவைத், லெபனான், சிரியா, இஸ்ரேலிலும் 27 மில்லியன் கண்ணிவெடிகள் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றது.

தென் கிழக்கு ஆசியாவில் கம்போடியாவிலும் வியட்நாமிலும் 11 மில்லியன் கண்ணிவெடிகளும் ஐரோப்பாவில் யூகோஸ்லாவியாவில் மாத்திரம் ஏழு மில்லியனும் லத்தீன் அமெரிக்காவில் பல்லாயிரக் கணக்கிலும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகக் கண்ணிவெடி எதிர்ப்பாளர்களின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மனித உரிமைக் குழுக்கள் அளிக்கின்ற தகவலின் படி உலகில் 48 நாடுகளில் 360 வகையான கண்ணிவெடிகளைத் தயாரிப்பதில் நூற்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

மாதாந்தம் 2000 பேரைப் பலியெடுக்கும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு 30 மில்லியன் டொலர் தேவைப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## இருதய மாற்றுச் சிகிச்சை

ஜப்பானில் முதன் முறையாக இருதயமாற்றுச் சிகிச்சை நடைபெற்றுள்ளது. ஜப்பானிய மக்கள் இதனை மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

44 வயதான பெண்மணி ஒருவரின் இருதயமே 40 வயதானவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## நைஜீரிய தேர்தலுக்கு அமெரிக்கா வரவேற்பு

நைஜீரியாவின் ஜனாதிபதித் தேர்தலை வரவேற்ற அமெரிக்கா வாக்களிப்பில் ஒழுங்கீனங்கள் ஏதும் இடம் பெற்றிருப்பின் அவை நிச்சயமாக விசாரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறது.

நைஜீரியாவின் ஜனாதிபதியாக ஜெனரல் ஒலுசெருன் ஒபஸன்ஜோ தெரிவு செய்யப்பட்டார் என நைஜீரியாவின் தேர்தல் ஆணைக்குழு திங்களன்று அறிவித்தது.

ஆனால் அவரது தெரிவை அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஒலுபாலே உடனடியாக எதிர்த்தார். வாக்களிப்பில் மோசடிகள் இடம் பெற்றதாகவும் தேர்தல் வெறும் மாயை எனவும் தெரிவித்தார்.

ஒபஸன்ஜோவுக்கு 18.7 மில்லியன் வாக்குகள் கிடைத்தன. பாலேயின் வாக்குகளை விட இது 11 மில்லியன் கூடுதலாகும். இதன் மூலம் நாட்டின் 15 வருட இராணுவ ஆட்சிக்கு முடிவு ஏற்பட்டுள்ளது. (ஐ 10)

## கிளின்ரனுக்கு மறுப்பு

புத்தகக் கடையொன்றில் புத்தகங்களை வாங்கிய அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் பணத்திற்குப் பதிலாக "எக்ஸ்பிரஸ் கார்ட்"டைக் கொடுத்த போது அதனைப் புத்தகக்கடை நிர்வாகிகள் வாங்க மறுத்து விட்டனர்.

அமெரிக்க பார்க் சிட்டியில் விடுமுறையைக் கழிக்கும் கிளின்ரன், கொடுத்த 'எக்ஸ்பிரஸ் கார்ட்' காலாவதியாகி விட்டதாகக் கூறியே அதனை அவர்கள் ஏற்க மறுத்து விட்டதாக அறிவிக்கப்படுகின்றது. (ஐ-10)

# இந்தியாவில் ஞாயிறன்று யுத்த விளையாட்டு!

புதுடில்லி, மார்ச் 4

இந்தியா தனது ஏவுகணைகளின் பலத்தை எதிர்வரும் 7 ஆம் திகதி பரீட்சித்துப் பார்ப்பதோடு ஏனைய நாட்டவர்களுக்கும் காண்பிக்க உள்ளது.

மேற்குப் பாலைவனமான பொக்ரானில் இந்தியா தனது ஏவுகணைகளைப் பரீட்சித்துப் பார்க்க உள்ளது. இந்தியாவின் இந்த 'யுத்த விளையாட்டுக்களில்' சுமார் 17 000 தொன் டி. என். டி. வெடி மருந்து பயன்படுத்தப்படும் என்று பிரஸ்டிரஸ்ட் ஒவ் இந்தியா (பி. டி. ஐ.) தெரிவித்துள்ளது.

குண்டுகள் யுத்தவிமானங்கள் ஆகியனவும் இந்த யுத்த விளையாட்டுகளில் (War Games), பயன்படுத்தப்பட உள்ளன.

இந்தியாவின் யுத்த விமானங்களான எஸ். யு-30 [S. U. 30], மிராஜ் 2000 (Mirage 2000) ஆகியனவும் இந்தப் பயிற்சிகளின் போது பயன்படுத்தப்பட உள்ளன.

கவசவாகனங்களும் ஏனைய இராணுவ வாகனங்களும், படையினரும் இதில் கலந்து கொள்வர்.

பொக்ரானில் இடம்பெறும் இந்த இராணுவப் பயிற்சிகளைப் பிரதமர் அடல்பிகாரி வாஜபாய், பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியயோரும் நேரில் சென்று பார்வையிடுவார்கள். (ஐ-10)

# ஸம்பியா குண்டுவெடிப்புக்கு அமெரிக்கா கண்டனம்

வாஷிங்ரன், மார்ச் 4

ஸம்பியாவில் ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலை மனிதத்தன்மையற்ற வன்செயல் என அமெரிக்கா கண்டித்துள்ளது என அமெரிக்க ராஜாங்க திணைக்கள பேச்சாளர் ஒருவர் கூறினார்.

ஸம்பியா தலைநகரான லுஸாகாவில் ஞாயிறன்று தொடராக 5 குண்டுகள் வெடித்ததால் அங்கோலா தூதரகத்தில் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டார்.

'இப் பயங்கர குண்டு வெடிப்பில் காயமுற்றவர்களுக்கு அல்லது சொத்துக்களை இழந்தவர்களுக்கு அமெரிக்க அரசு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறது' என்று ராஜாங்க திணைக்கள பேச்சாளர் ஜேம்ஸ் பெர்லி கூறினார்.

ஸம்பிய அதிகாரிகள் இது குறித்து தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக நாம் அறிகிறோம். இதில்

உலக அரங்கில்

சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் இவ் விசாரணைக்கு பூரணமாக உதவ வேண்டும் எனவும் நிலைமையை மேலும் மோசமாக்காதவாறு நடந்து கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளுகிறோம் எனவும் அவர் தெரிவித்திருக்றார். முதலாவது குண்டு வெடிப்பு அதிகாலை கேட்டது. அதனைத் தொடர்ந்து பிற்பகல் லுசாக்கா நகரின் பல்வேறு பகுதிகளில் இன்னும் குண்டு வெடிப்புகள் கேட்டுக் கொண்டிருந்தன.

இதற்கு யாரும் உரிமை கோரவில்லை.

சமீபகாலமாக ஸம்பியாவுக்கும் அங்கோலாவுக்கும் இடையில் உறவுகள் விரிசல் அடைந்துள்ளதாகத் தன்னை இனம் காட்ட விரும்பாத ஸம்பிய அதிகாரி ஒருவர் கூறினார்.

அங்கோலாவின் பூரண சுதந்திரத்திற்கான தேசிய யூனியன் கிளர்ச்சியாளர்களுக்கு ஸம்பிய அரசு ஆதரவளிப்பதாக அங்கோலா குற்றஞ்சாட்டியுள்ளது. [ஐ-10]

## செய்திச் சரம்

### முச்சக்கரவண்டி

நல்லூர், மார்ச் 4

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஊனமுற்றோர்களுக்கு வழங்கவென ஐந்து முச்சக்கரவண்டிகளை சமூக சேவைகள் திணைக்களம் வழங்கியுள்ளதாக பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் செ. யோகானந்தராஜா தெரிவித்தார். (ஐ-103)

### பனங்கள் விலை குறைப்பு

ஊர்காவற்றுறை, மார்ச் 4

ஊர்காவற்றுறைப் பகுதியில் ஒரு போத்தல் பனங்கள் பத்து ரூபாவாக விலை குறைக்கப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி முதல் இவ்விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

அதிகளவு உற்பத்தியே இவ் விலைக் குறைப்புக்கு காரணமாகும். (-ஐ 16)

### ஓய்வு பெற்றார்

நல்லூர், மார்ச் 4

யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் சிதம்பரநாதன் அருட்பிரகாசம் 31 வருட கால சேவையின் பின் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் பேராதனை, யாழ்ப்பாணம் பல்கலைக் கழகங்களில் பரீட்சைகளுக்கும் அனுமதிக்குமான கிளையில் உதவிப்பதிவாளராகப் பணியாற்றினார். (ஐ-103)

## கணனிப் பயிற்சிக்கு நிபுணர் குழு வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஐ. நா. அபிவிருத்தி திட்டத்தினால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள கணனிப்பயிற்சி நிலையத்தில் கணனிப் பயிற்சியை அளிப்பதற்காக கணனித்துறையில் நிபுணத்துவம் பெற்றுள்ள மூன்று பேர் கொண்ட குழு ஒன்று இம் மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளது.

இந்த மூன்று நியுணர்களும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து கணனிப்பயிற்சிகளை வழங்குவார்கள்.

ஐ நா. அபிவிருத்தித் திட்டத்தினால் தெரிவு செய்யப்பட்ட 16 பேருக்கு முதற் கட்டப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறி பூர்த்தியடைந்ததும் ஏனையவர்களுக்கான கணனிப்பயிற்சிகள் நடைபெறும் என்று ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-5)

## பாலர் கல்விக்கு ப. நோ. கூ. ச. உதவி

கைதடி, மார்ச் 4

எந்த நிறுவனங்களின் உதவியுமின்றி இயங்க முடியாத நிலையில் உள்ள பாலர் பாடசாலைகளில் ஐந்தைத்தெரிவு செய்து அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி மேற்கு ப. நோ, கூ. சங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

சங்கத்தின் பொதுச் சபையும், பணிப்பாளர் சபையும் பாலர் கல்வியை மேம்படுத்த ஏகமனதாக இத் தீர்மானத்தை எடுத்துள்ளன.

இம்மாதம் தொடக்கம் அமுலுக்கு வரும் இத் திட்டம் மற்றைய பின்தங்கிய பாலர் பாடசாலைகளுக்கும் விரிவாக்கப்படும் என தலைவர் சி. சுப்பிரமணியம் கூறினார். (ஐ-74)

## 16 பாடசாலைகளில் விவசாயப் பண்ணைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 3

வடமராட்சி, வலிகாமம் பகுதிகளிலுள்ள 16 பாடசாலைகளில் பட்டினிக்கெதிரான இயக்கத்தினால் விவசாயப்பண்ணைகள் அமைக்கப்படவுள்ளன.

பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் அமைக்கப்படவுள்ள இந்த விவசாயப் பண்ணைகள் ஏப்ரல் முதல் வாரத்திலிருந்து செயற்பட உள்ளது. இந்தப் பண்ணைகளுக்கு விதைகள், விவசாய உபகரணங்கள் போன்றவற்றை நேரடியாக வழங்குவதுடன் பண்ணைகள் நடத்துவதற்கான பயிற்சி வகுப்புக்களும் பட்டினிக்கு எதிரான இயக்கத்தினால் நடத்தப்படவுள்ளன.

விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் அமைக்கப்படவுள்ள இந்த விவசாயப்பண்ணைகளுக்கு உதவும் பொருட்டு மருதனார்மடம் பகுதியில் விவசாய மூலவள நிலையம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இந்த மூலவள நிலையத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் செய்முறை வகுப்புகளும், தொழில் நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

விவசாயச் சூழலிலுள்ள பாடசாலைகளிலே இந்த விவசாயப்பண்ணைகள் அமைக்கப்படவுள்ளதாக பட்டினிக்கு எதிரான இயக்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-5)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

கரவெட்டி முன்பள்ளி கலைவிழாவும் ஆசிரியர் பயிற்சி நெறி சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிறு பி.ப. 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் திரு. [illegible] தலைமையில் நடைபெறவுள்ளன. [ஐ-5]


## முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு 08 — 01 — 1935

உதிர்வு 13 — 02 — 1998

**கந்தையா கனகமாணிக்கம்**

(இளைப்பாறிய புள்ளிவிவர ஆய்வாளர்)

திதி: 04 — 03 — 1999

என்றும் எம் நெஞ்சங்கள் — உங்கள்
இனிய நினைவுகளுடன் காத்திருக்கின்றன ...

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேர்த்தி, உறவினர், நண்பர்கள்

சேச் லேன்,
தாவடி,
கொக்குவில்.

(63609)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

1½ மாதம் நிரம்பிய பொமனேரியன் (பெண்) நாய்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். கு. சதானந்தன் 5/1 புகையிரத வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(63591)

நல்லின கலப்பினக் கோழிக் குஞ்சுகள் மற்றும் இரட்டை இரும்புக் கேற் (10 அடி), பாலைத் தீராந்திகள் (4''-2'', 6''-4'') கதவு நிலைகள் (4''-2'', 6''-4'') என்பன விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். 40/6, புகையிரத கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம். (செல்வ நாக பூசணி அம்மன் கோயில் அருகில்)
[63596]

புதிய YAMAHA DD - 9 Ocbo Pad, Unisyotb XG - 1 Electronic Guitar, வீணை, ஆர்மோனியம் ஆகிய இசைக் கருவிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. S. றஜீந்திரன், 23, குறோசற் வீதி, சுண்டுக்குளி. மாலை 2 மணிக்குப் பின.
[63585]

## தவறிவிட்டது

காங்கேசன்துறையைச் சேர்ந்த மா. அருளனாந்தன் என்பவருடைய தேசிய, விஷேட, தொழில் அடையாள அட்டைகள் மூன்றும் தாவடி தெற்கில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தாவடி தெற்கு கிராமசேவகரிடம் ஒப்படைத்து உதவவும். (தே. அ. அ. இலக்கம்- 473191890V)
[63593]

சின்னத்தம்பி நடராசா ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0901017696) 3 ஆம் குறுக்குத் தெருவுக்கும் பாங்சால் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து P. J. பெர்ணான்டோ 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
[63595]

## பொருளியல்

'சர்வதேச வர்த்தகம்' 'வர்த்தக மாற்று வீதம்', ஆகிய நூல்கள் விற்பனையாகின்றன. ஆசிரியர், வே. கருணாகரன், கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(63590)

## மணமகள் தேவை

யா/ இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 36 வயதுடைய செவ்வாய் தோஷமுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியருக்கும் 29 வயதுடைய செவ்வாய் தோஷமற்ற அரசாங்க வர்த்தக திணைக்களத்தில் முகாமையாளராக கடமையாற்றுபவருக்கும் தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். ஆசிரியை விரும்பத்தக்சது. இல. 852, மே/பா உதயன் கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
[63573]

## இலகு திருமண சேவை

1964 கார்த்திகை செவ்வாய் 1 சுவிஸ் மணமகனுக்கு மணப் பெண் சுவிசிலும், 1969 பூரட்டாதி செவ்வாய் 7 மணப்பெண்ணுக்கு மணமகனும் தேவை. தொடர்பு ஞாயிறு காலைகளில். துரைவிமலா கே. கே. எஸ். வீதி, யாழ். நாச்சிமார் கோவிலடி.
(63565)

# நன்றி கூறுகின்றோம்

ஜெயபாலன் சோபன்ராஜ் ஆகிய எனது தவறவிடப்பட்ட விசேட அடையாள அட்டையைக் கண்டெடுத்த அன்பருக்கும், அதனை பாதுகாத்து என்னிடம் ஒப்படைத்த ஆறுகால்மடம் கமு கடை உரிமையாளருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

ஜெ. சோபன்ராஜ்,
சங்கானை.

[63604]

பாட்டா வாடிக்கையாளர்களுக்கு,

## பாட்டா றப்பர் செருப்புகள்

கொழும்பில் இருந்து வந்துள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாமதத்தினைத் தவிர்த்துக் கொள்ளவும்.

## பாட்டா
## மொத்த விற்பனை நிலையம்

350, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

[63600]

கரவெட்டி பிரதேச இளைஞர் சம்மேளனம்

## இலவச மொழிப் பயிற்சி வகுப்புகள்

## ஆங்கிலம் - சிங்களம்

**ஆரம்பம்:** 1999—03—10 பிற்பகல் 3 மணி

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை **1999—03—08** ஆம் திகதிககு முன்னர், 'செயலாளர் பிரதேச இளைஞர் சம்மேளனம், பிரதேச செயலகம், கரவெட்டி' என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

செயலாளர்,
பிரதேச இளைஞர் சம்மேளனம்.

பிரதேச செயலகம்,
கரவெட்டி.

[63597]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி மாணிக்கவாசகர் நேசரத்தினம்

மலர்வு 01 - 01 - 1931

உதிர்வு 02 - 02 - 1999

எனது அன்பு மனைவியின் மரணத்தின்போது உடன் வந்து உதவியோருக்கும், மரணச்சடங்கில் கலந்துகொண்டு ஆறுதல் அளித்தோருக்கும், அன்றில் இருந்து இன்றுவரை சகல உதவி, ஒத்தாசை புரிந்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு 6 - 3 - 1999 ஆம் திகதி (சனிக்கிழமை) எனது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

நன்றி;

இ. மாணிக்கவாசகர்
(கணவர்)

சுன்னாகம் தெற்கு. (63568)

# VACANCY

## Assistant Project Co-Ordinator
**KARAINAGAR**

Applicants with:
Good command of English knowledge
Sufficient Educational background to Plan, Monitor and IMPLEMENT Projects.
Age below 50 years.
Experience in Administrative capacity in N. G. O field for at least 5 years preferred

Apply before: 10th March 1999.

To: **Project Manager,**
**FORUT,**
**67, Temple Road, Jaffna.**

(63594)

# நன்றி நவிலல்

## விஜயசுந்தரம் விஜயகுமாரன்
(சிறி)

16 — 02 — 99 இல் மரணமடைந்த விஜயசுந்தரம் விஜயகுமாரனின் மரணச்செய்தி அறிந்து, கொழும்பில் இடம்பெற்ற அவரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இங்கு எமது இல்லத்துக்கு நேரில் வருகை தந்தும் அஞ்சல் மூலமாகவும், தொலைபேசி மூலமும் அனுதாபச் செய்திகள் அறிவித்து, எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி இ. விஜயசுந்தரமும்,
சகோதரர்களும், சகோதரியும்.

595/5, நாவலர் வீதி,
நல்லூர்.

(63601)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பர் கந்தையா
(அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்)

சங்கானை கிழக்கு ஞான வைரவர் வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சுப்பர் கந்தையா 03 - 03 - 99 அன்று காலமானார்.

அன்னார் மாரிமுத்துவின் அன்புக் கணவரும், தவமலர், பரிமளம், தங்கரத்தினம், அற்புதராசா (பிரான்ஸ்), செல்வராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராசா (புதுக்குடியிருப்பு), செல்வராசா (புதுக்குடியிருப்பு), கந்தையா (புதுக்குடியிருப்பு), பத்மநாதன் (முள்ளியவளை), புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03-03-99 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. வ. அரசன் (J.P)

சங்கானை கிழக்கு,
சங்கானை.

(63608

## சின்னத்தம்பி தங்கராஜா

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளையைச் சேர்ந்த சின்னத்தம்பி தங்கராஜா 28 - 02 - 99 அன்று ஜேர்மனியில் அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சிவபாக்கியம், ராசம்மா [பிரான்ஸ்], காலஞ்சென்ற துரைராஜா, தியாகராஜா [கனடா], செல்லம்மா [பிரான்ஸ்], சண்முகராஜா, பரஞ்சோதி, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னத்துரையின் அன்பு மைத்துனரும், பவளமணி [ஜேர்மனி], பவளராணி [ஜேர்மனி], கிருஸ்ணதாஸ் [ஜேர்மனி], ராசமலர் [ஜேர்மனி], முருகதாஸ் [ஜேர்மனி], பாசமலர் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாநிதி, கந்தசாமி, சிறிச்சி, ரவிசங்கர், சிவகௌரி, கருணாரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும், சகி, கவிதா, கவிதரன், மதுரா, மதிதாஸ், பிரசாத், பிருந்தா, றொபின், பிறின்சன், பிரசன்னா, பிரதீப், பிரணவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04 - 03 - 99) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. பாலசுப்பிரமணியம்
(மருமகன்)

சூராவத்தை,
சுன்னாகம்.

[63603]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

### வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவில்

# கசிப்பு உற்பத்தியைத் தடுக்க

# ச. ச. நிலையங்கள் முயற்சி

வலி. வடக்கு, மார்ச் 4

வலி. தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அதிகரித்து வரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை என்பவற்றில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை இப்பகுதிகளைச் சேர்ந்த சனசமூக நிலையங்கள் மேற்கொண்டு வருகின்றன.

சுன்னாகம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க. மெய்யழகன் தலைமையில் சங்கக் காரியாலயத்தில் இப்பகுதி சனசமூக நிலையங்களின் தலைவர்கள் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து தத்தம் பகுதிகளில் சட்டவிரோதமாக மது உற்பத்தி, விற்பனையில் ஈடுபடுபவர்களுடன் நேரில் பேசி இத்தகைய நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடவேண்டாமென அவர்களைக் கேட்டுக்கொள்வதெனவும் அது வெற்றியளிக்காத சந்தர்ப்பத்தில் பிரதேச செயலாளர் உதவியுடன் கிராம அலுவலர்கள் மூலம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது இப்பகுதிகளில் உள்ள பல வெறும் காணிகளில் பகிரங்கமாகக் கள் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-86)

# 77 பொதிகளில் தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் உட்பட 77 தபாற்பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலமாக நேற்று யாழ். எடுத்து வரப்பட்டன.

இதேவேளை —

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 24 தபாற் பொதிகள் நேற்றைய தினமே மேற்படி கப்பல் மூலம் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் —

நேற்றைய தினம் வந்து சேர்ந்த தபாற் பொதிகள் யாவும் இன்று முதல் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் எனவும் —

யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். (ஐ-7)

# இசை, நடன பட்டதாரிகள் முடிவு நாளை வெளிவரும்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் இறுதியாண்டு இசை, நடன மாணிப் பட்டதாரிப் பரீட்சை முடிவுகள் இன்று வியாழக்கிழமை வெளியிடப்படவுள்ளதாகப் பல்கலைக்கழகப் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இசை, நடனத்துறைகளில் டிப்ளோமாப் பட்டங்களே வழங்கப்பட்டுவந்தன.

முதல் தடவையாக இசை, நடனத்துறைப் பட்டதாரிகள் இம்முறையே வெளியேறுகின்றனர். (உ-7)

# இசை விழா நடத்த ஏற்பாடு

வட்டுக்கோட்டை, மார்ச் 4

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் மாபெரும் இசை விழா ஒன்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் தொடர்ந்து மூன்று நாள்கள் நடத்தப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளைகலாசாரப் பேரவைத் தலைவர் கா. சந்திரராசா தலைமையில் கிராம உத்தியோகத்தர்களின் உதவியுடன் கலாசாரப் பேரவை மேற்கொண்டு வருகிறது. (ஐ-12)

# நியமனம்

வட்டுக்கோட்டை, மார்ச் 4

வட்டுக்கோட்டை மேற்குப் பிரிவுக்கு புதிய கிராம உத்தியோகத்தராக செல்வி தேவமனோகரி மகாதேவன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-12)

# தாதிமார் மீண்டும் வேலை நிறுத்த முஸ்தீபு

அரச சேவை ஐக்கிய தாதிமார் சங்கம் தான் முன் வைத்துள்ள கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் நாடு எங்கும் உள்ள ஆஸ்பத்திரிகளில் இந்த மாதம் 9ஆம், 10 ஆம் திகதிகளில் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது.

தாதிமார்களுக்கான நிர்வாக அலுவலர் ஒருவர் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டுமென்றும் சங்கம் கோரியுள்ளது.

சங்கத்தின் தலைவர் வண. முத்தெட்டுவே ஆனந்ததேரர் சங்கக் கோரிக்கைகள் குறித்து கடந்த பல மாதங்களாக சுகாதார அமைச்சுக்கும் சுகாதார அமைச்சருக்கும் தாம் தெரியப்படுத்தி வந்துள்ளதாகக் கூறினார்.

தமது சட்டபூர்வமான கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வேலை நிறுத்தத்தில் லேடி றிட்ஜ்வே சிறுவர் ஆஸ்பத்திரி, டி சொய்சா மகளிர் ஆஸ்பத்திரி, மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரி ஆகியவற்றைச் சேர்ந்த தாதிமார் பங்குபற்ற மாட்டார்கள் என்று அவர் தெரிவித்தார்.

தாதிமார் சங்கத்தின் கோரிக்கை தொடர்பாகத் தாம் பரிசீலிப்பதாகவும் —

சம்பந்தப்பட்ட நிர்வாக அலுவலர் குறித்து விசாரணை நடத்தப்படுவதாகவும் —

சுகாதார அமைச்சு கூறுகின்றது. (உ-6)

# பரிசளிப்பு விழா

கோப்பாய், மார்ச் 4

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசார கழகத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கலை அரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் செ. செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தைப்பொங்கல் தினத்தன்று நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். இவ்விழாவில் பட்டிமன்றம், நடனம், இன்னிசை ஆகிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (ஐ-72)

# பன்னிரு திருமுறைகள்; யாழ்ப்பாணத்தில் ஆய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 4

பன்னிரு திருமுறைகள் பற்றிய ஆய்வு ஒன்று முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் குழு ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழு திருமுறைகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு அது பற்றிய விவரங்களை மூன்று தொகுதியாக வெளியிடும் எனவும்—

முதலாவது தொகுதியில் திருமுறைகளில் காணப்படும் விஞ்ஞான, தொழில்நுட்பக் கருத்துக்களும், சமூக பண்பாட்டுக் கூறுகள் பற்றிய விடயங்களும் இடம்பெறும் எனவும்—

இரண்டாவது தொகுதியில் பன்னிரு திருமுறைகளின் மொழி, இலக்கியம் பற்றிய ஆய்வு விவரங்கள் அடங்கும் எனவும்—

மூன்றாவது தொகுதியில் திருமுறைகளில் கூறப்படும் மூர்த்தி, தலம், தீர்த்தம், தத்துவம் பற்றிய ஆய்வுக் கருத்துக்கள் இடம் பெறும் எனவும்- தெரிவிக்கப்பட்டது.

விசேட அடையாள அட்டைப் பிரிவின் கருத்திட்ட முகாமையாளர்எஸ். திருலிங்கநாதன் மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் குறித்து யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அண்மையில் அனுப்பி வைத்த கடிதம் ஒன்றை அடுத்தே மேற்படி ஆய்வு முயற்சி மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெவிக்கப்பட்டது. (உ-7)

# கல்வி அதிகாரிகள் தங்க புதிய விடுதி அமைப்பு

யாழ்ப்பாணம். மார்ச் 4

கொழும்பு மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இருந்து அலுவலக விடயங்கள் தொடர்பாக யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்யும் கல்வி அதிகாரிகள் தங்குவதற்கென சகல வசதிகளையும் கொண்ட விடுதி ஒன்று யாழ். வலயத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த பல வருடங்களாக வட இலங்கை சங்கீத சபையினரின் பாவனையில் இருந்து வந்த கட்டடம் ஒன்றே புனரமைக்கப்பட்டு விடுதியாக மாற்றப்படவுள்ளது.

கடந்த காலங்களில் அலுவலக விடயங்கள் காரணமாக யாழ். வரும் கல்வி அதிகாரிகள் பலர் தமது உறவினர் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலுமே தங்கிச் செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது

இதனையடுத்தே தற்போது விடுதி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

# வன்னி மக்களுக்காக தீவகத்தில் கொடி வாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

வன்னி மக்களின் துயர் துடைப்புக்கு நிதி சேகரிப்பதற்காக தீவக மக்கள் கொடி வாரம் ஒன்றை அனுஷ்டித்து வருகின்றார்கள்.

பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் மார்ச் 7 ஆம் திகதி வரை இந்தக் கொடி வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

கொடி வார நாள்களில் தீவகம் முழுவதும் கொடிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தக்கொடி வாரம் மூலம் சேகரிக்கப்படும் நிதி மனித முன்னேற்ற நடு நிலையம் ஊடாக வன்னிப்பகுதி மக்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

நிவாரண நிறுத்தம் மற்றும் தொடரும் யுத்தத்தினால் வன்னிப்பகுதி மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன் மரங்களின் கீழும், வீதியோரங்களையும் தமது இருப்பிடங்களாகக் கொண்டு பெரும் அவல நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் துயர் துடைப்பதற்காக நிதி உதவி வழங்கி அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கொடி வார ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-5-51)

# ச. ச. நிலையத்தில் இருந்து படையினர் வெளியேறினர்

பருத்தித்துறை முனை புனித தோமையார் சனசமூக நிலையத்திலிருந்து படையினர் வெளியேறியதை அடுத்து அச் சனசமூக நிலையம் மீண்டும் கடந்த திங்கள் முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து இச் சனசமூக நிலையத்தில் படையினரின் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

இச் சனசமூக நிலையத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கு காவலரணை நீக்குமாறு இச் சனசமூக நிலையத்தைச் சேர்ந்தவர்கள் படையினரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து சில தினங்களுக்கு முன்னர் இங்கிருந்து படையினர் வெளியேறினர். (ஐ-173)

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க கொழும்பில் இருந்து 10 லொறிகள்

அரியாலை, மார்ச் 4

யாழ். மாவட்டத்தில உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதற்கட்டமாக பத்து லொறிகள் கப்பல் மூலமாக கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட உள்ளன.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் இத் தகவலைத் தெரிவித்தார்.

மத்திய கூட்டுறவு அமைச்சின் உதவியுடன் எடுத்து வரப்படும் இந்த லொறிகள் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவுத் திணைக்களத்தின்சிபார்சுடன் வழங்கப்படும்.

கூட்டுறவு அமைச்சு இந்த லொறிகளை சங்கங்களுக்கு கடன் அடிப்படையில் மாதாந்தம் பத்து வீத வட்டியில வழங்க முன்வந்திருப்பதாகவும் உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த லொறிகளை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்கு கொழும்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-17)

# மழை, காற்றினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நஷ்டஈடு

வலி. கிழக்கு, மார்ச் 4

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் கடந்த வருட மழை மற்றும் கடும் காற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் பொருட்டு கிராம சேவையாளர் ஊடாக நஷ்டஈடுபெறத் தகுதி வாய்ந்தவர்களுக்கு படிவம் ஒன்று வழங்கப்பட்டு வருகின்றது.

இதனைத் தொடர்ந்து வெகுவிரைவில் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கோப்பாய்ப் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். இராசலிங்கம் தெரிவித்தார். (ஐ-180)

# கிராம அலுவலர்களுக்கு உபகரணங்கள் கிடைக்கும்

யாழ். மாவட்டத்தில் பிரதேச மட்டத்திலான அரசாங்க நிர்வாக செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கான செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.


பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் செயற்றிறனை அதிகரிப்பதன் மூலம் பிரதேச மட்டத்திலான அரச நிர்வாகத்துக்கு வலுவூட்டும் வகையில் மேற்படி செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யாழ். செயலக திட்டமிடற் பிரிவினால் தயாரிக்கப்பட்ட இச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 'சீடா' நிறுவனத்தின் உதவி பெறப்படவுள்ளது

இத் திட்டத்தின் படி கிராம உத்தியோகத்தர்களுக்குரிய அலுவலக தளபாடங்கள் மற்றும் அவர்களது கடமையை இலகுவாக்குவதற்கும். விரைவு படுத்துவதற்கும் வேண்டிய உபகரணங்கள் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படும். இதன் மூலமாக பிரதேச செயலக நிர்வாகத்துக்கு வலுவூட்டப்படும். (ஐ-99-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணக வாழ்வின்
## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 01 — 10 — 1941 | 04 — 03 — 1994 |

### அமரர் அந்தோனிப்பிள்ளை வில்பிறேட்

ஆண்டு ஐந்து ஓடி மறைந்திடினும்
ஆறிடுமோ எம்துயர் அப்பா!
நேரிய வழிகாட்டி வாழ்வினில்
ஒளியூட்டிய சீரிய தெய்வமே!
நீங்கள் மறைந்தாலும் உங்கள்
நினைவுகளை மனதில் சுமந்து நிற்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கும்.

**மனைவி, மக்கள்.**

நாவலர் வீதி.
அரியாலை. (63592)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் முத்து நடராஜா

தோற்றம் 14-02-1936 — மறைவு 23-02 1997

திதி: 04—03—1999

ஆண்டு இரண்டு சென்றாலும் அழியாத
உங்கள் அன்பு முகம் பாசத்தின் சிகரம் ஐயா!
பாதியிலே எம்மை விட்டு எங்கு சென்றீர்?
காலமெல்லாம் எமக்கென வாழ்ந்து
பாசமழை பொழிந்த உங்கள் குரல் ஓய்ந்து
ஆண்டிரண்டு ஆனாலும் அப்பா...
அப்பா... எங்கள் குரல் ஓயவில்லை.
பாசமிகு கணவனாய், தந்தையாய், மாமனாராய்,
பேரனாய் இருந்த
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்களை நினைக்க மறந்ததில்லை அப்பா!

உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி: **கமலாதேவி,**
பிள்ளைகள்: **சிறி, ராஜன், கண்ணன், ஜீவா, பேபி,**
மருமகள்: **அனு,**
பேரப்பிள்ளைகள்: **கீரன், ரூபன்.**

கலட்டி, வல்வெட்டி. (63484)

## இல்ல விளையாட்டு போட்டி

வலி. வடக்கு மார்ச் 4

மல்லாகம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வி. சச்சிதானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் வலயம் பிரிவு III உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி ஆ. சிவபாதம், உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வி பாலசிங்கம், சட்டட மேற்பார்வையாளர் த, கந்தவனம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-86)

## ஆலயம் புனரமைப்பு

கோப்பாய், மார்ச் 4

கோப்பாய் தெற்கு, டச்சு வீதியில் அமைந்துள்ள இராஜ இராஜேஸ்வரி தேவஸ்தானம் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

நீண்டகாலமாக சிறிய மண்டபத்தில் அமைந்திருந்த இவ்வாலயம் அப் பிரதேச மக்களின் உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது. (ஐ-72)

## புதிய கடைத் தொகுதி

நல்லூர், மார்ச் 4

யாழ். நகர மரக்கறிச் சந்தையில் புதிதாகக் கட்டப்பட்ட 24 கடைகளை நகரப் பகுதியில் உள்ள அங்காடி வியாபாரிகளுக்கு மாநகர சபை வழங்கியுள்ளது. (ஐ-103)

## பிரியாவிடை

கோப்பாய், மார்ச் 4

ஆ... ால் மகாஜன வித்தியாலய ...ன்னாள் அதிபர் துரை எங்கரசின் பிரியாவிடை வைபவம் பாடசாலை அதிபர் அ. அருந்தவநேசன் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-72)

## கிரிக்கெட் போட்டி

அரியாலை, மார்ச் 4

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய ஜெற்லைனேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 29 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஏழு பேர் கொண்ட பன்னிரண்டு ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்பட உள்ளது.

இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் ஜெற்லைனேர்ஸ் விளையாட்டுக் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு விளையாட்டுச் செயலாளர் கே. தவஸ்கந்தா தெரிவித்தார். (ஐ-17)


மாதாந்த பயிற்சிப் பரீட்சை

வினாத்தாள்களையும் (ஜனவரி), புலமைப் பரிசில் வினாத்தாள்களையும் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.
(9, 10, 11 இற்கான பரீட்சை சனிக்கிழமை நடைபெறும்.)

BOND
யாழ்நகர்
(63546)


## ஆசிரிய கலாசாலையில்
# விரும்பிய கற்கைநெறி பயில முடியாத நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஆசிரிய நியமனக் கடிதத்தில பாடங்கள் குறிப்பிடப்படாது நியமனங்கள் வழங்கப்பட்டதால் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் தமது விருப்பத்துக்கேற்ற கற்கை நெறியைத்தொடர முடியாத நிலை ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி மாதம் தமிழ்மொழி மூல தகுதிகாண் பயிலுநர் ஆசிரிய நியமனங்கள் குடா நாட்டில் வலய ரீதியாக வழங்கப்பட்டமை தெரிந்ததே.

இரண்டு கல்வி வலயங்கள் நடைமுறையில் இருந்த காலத்தில் நியமனம் பெற்ற சுமார் 160 ஆசிரியர்களே இந்த நெருக்கடி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்ட வேளை வலயம் ஒன்று பணிமனையில் ஒவ்வொரு ஆசிரியர்களும் எந்தப் பாட போதனைக்காக நியமிக்கப்படுகின்றார்கள் என அவர்களது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனால் வலயம் ஒன்று பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட வேளை தமது பாட விவரத்தைக் குறிப்பிட்டு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு நுழையும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

ஆனால் வலயம் இரண்டு பணிமனை ஊடாக நியமனம் பெற்றவர்களின் பாட விவரம் குறிப்பிடப்படாததால் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை நிர்வாகம் விதிக்கும் பாட நெறிகளையே குறித்த ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)


எந்த வித T. V களையும் பழுது பார்க்கவும்
T. V நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்க்க
அன்ரனாக்கள் பொருத்தவும்

தெளிவாக ரி. வி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு U. H F.. V. H F அன்ரனாக்கள் பொருத்திக்கொள்ளவும் புதிய U. H. F, V H. F பூஸ்ரர்கள், அன்ரனாக்கள் வயர்கள், SONY 2032, 2060, 2030 கலர், கறுப்பு வெள்ளை SONY 12'' ரி விகள் வாங்கிக் கொள்ளவும். சகல ரி. வி, டெக், றேடியோ, மணிக்கூடுகள் பழுது பார்க்கவும்.

வீனஸ் டெல்கா
140, K. K. S. வீதி [சத்திரச்சந்தி],
யாழ்ப்பாணம்.

தலைமையகம்
284, ஸ்ரான்லி வீதி, [நாகவிகாரை முன்பாக]
யாழ்ப்பாணம்.

T. P 2064 (சி/6666)


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இராசையா செல்வராசா
(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம் 09—09—1922 — மறைவு 19—02—1992

திதி: 04 - 03 - 1999

ஆண்டுகள் பல கடந்தாலும் — அப்பா
நீங்குமோ உங்கள் நினைவுகள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

**மனைவி, மகள்மார், மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.**

'சுபசதனம்'
சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (63584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மக்கள் கருத்து புறக்கணிப்பு

வன்னிப் பிரதேசத்தில் படையினரின் இராணுவ நடவடிக்கை எந்நேரமும் ஆரம்பிக்கப்படலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

போர் நிறுத்தப்படவேண்டும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும்; என்று கோரி கடந்த வெள்ளிக்கிழமை தான் கொழும்பில் பிரமாண்டமான பேரணியும் கூட்டமும் நடத்தப்பட்டன.

சர்வமதத் தலைவர்கள் வன்னிப் பகுதிக்கு விஜயம் செய்து அங்கு வாழும் மக்களின் மோசமான. பரிதாபமான வாழ்க்கை நிலையை நேரில் கண்டறிந்த பின்னர், தேசிய சமாதான கூட்டமைப்பின் ஆதரவில் மேற்கண்டவை நடத்தப்பட்டன.

மழையின் மத்தியிலும் பெருந்திரளான மக்கள் அந்தப் பேரணியில் கலந்து கொண்டதால். தென்னிலங்கை வாழ் மக்கள் அமைதியையும். சமாதானத்தையும் பெரிய அளவில் விரும்புகிறார்கள் என்பதனை அது பிரதிபலித்ததாகவே அவதானிகள் கருதினர்.

இதேவேளை, வன்னியில் போரை நிறுத்துமாறும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்குமாறும் ஜனாதிபதிக்கு தேசிய சமாதானக் கூட்டமைப்பு அறிக்கை சமர்ப்பிக்கவும் இருந்தது.

ஆனால் மக்களின், மதத் தலைவர்களின் விருப்பத்தை சிறிதும் கவனத்தில் கொள்ளாமல், அது குறித்து பரிசீலனை செய்வதற்கோ, கலந்துரையாடுவதற்கோ நேர இடைவெளி வைக்காமல் வன்னியில் தணிந்திருந்த போரை முடுக்கிவிட படையினர் — அரசு — ஆயத்தமாகி உள்ளது!

அரசியல் தலைமைத்துவத்தின் உத்தரவுக்குக் காத்திருக்காமல் களத்தில் நிலவும் சாதக பாதக நிலைகளை அனுசரித்து இராணுவ அதிகாரிகள் தமது தாக்குதல் உத்திகளை, அட்டவணைகளை வகுத்துச் செயற்படுத்துவர். ஆகையால் சமாதானப் பேரணியையும் வன்னியில் இராணுவ நடவடிக்கை தொடங்குவதையும் தொடர்புபடுத்த முடியாது என்று வாதாடலாம்,

சர்வமதக் குழுவினரின் வன்னி விஜயத்தின் பெறுபேறுகள் அரசாங்கத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என்று பலரும் அனுமானித்தனர். ஆனால் அப்படி ஒரு திருப்பம் வரக்கூடாது என்பதில் அரசு அக்கறையாக உள்ளதையே தீவிரப் போருக்கான ஆயத்தம் எடுத்துக் காட்டுகிறது.

அமைதியிலும், சமாதானத்திலும், தீர்வு காண்பதிலும் சிறிதேனும் அக்கறை இருந்திருப்பின், இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டாம் என்றவாறு அரசியல் தலைமைப்பீடம் உத்தரவிட்டிருக்கலாம். மனம் இருந்தால். மதத் தலைவர்களினதும், மக்களினதும் கருத்துக்களுக்கு செவி சாய்க்கபட்டிருக்கும். ஆனால் அவை புறக்கணிக்கப்பட்டன; புறக்கணிக்கப்படும் என்று இப்போது எடுத்துரைக்கப் பட்டுள்ளது!

# வயல் நிலத்தில் போதிய ஈரமுள்ளதால் அவரை பயிரிட்டுப் பயன் பெறுங்கள்

யாழ். மாவட்டத்தில் 1998 — 99 காலபோகத்தில் 8,800ஹெக்டெயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது ஆரம்பத்தில் ஏற்பட்ட வரட்சி காரணமாக ஒருபகுதி அழிவுக்குள்ளானதைப் பின் தொடர்ந்து பரவலாகப் பெய்தமழை காரணமாகப் பயிர் ஓரளவு செழித்துவளர ஆரம்பித்தது.

ஆனால் டிசெம்பர் மாதக் கடைசியில் பெய்த பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் ஒரு பகுதி நெற்செய்கை பாதிப்படைந்தது, இருந்த போதும்எஞ்சிய7.790 ஹெக்டெயர் நெற்பரப்பும் ஓரளவு செழிப்பாக வளர்ந்து

## விவசாயிகளுக்கு ஓர் ஆலோசனை

அறுவடை ஆரம்பித்து 30% அறுவடை மேற்கொண்ட வேளையில், பெப்ரவரி மாத நடுப்பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக பெரும்பாலான நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் அறுவடை தடைப்பட்டது.

இருந்த போதும் மழை ஓய்ந்தபின் பலவிதமான சிரமங்களுக்கு மத்தியில் விவ

**த. சிவலோகநாதன்**
உதவிவிவசாயப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

சாயிகள் வெள்ளத்தில் மூழ்கிய நெல்லை அறுவடை செய்து வருகின்றனர். வெள்ளத்தில் மூழ்கிய நெல் விதைத் தேவைக்குப் பாவிப்பதற்கு உகந்ததல்ல. அத்துடன் கூடிய காலத்திற்குச் சேமித்து வைக்கவும் முடியாது,

### நில ஈரம்

யாழ். மாவட்டத்தில் என்றும் இல்லாதவாறு பெப்ரவரி மாத நடுப்பகுதியில் பெருமழை பெய்ததன் காரணமாக பெரும்பாலான வயல் நிலங்களில் கூடிய காலத்திற்கு நில ஈரம் இருக்கக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. எனவே இந்தச் சாதகமான நிலையைப் பயன்படுத்தி நெற் செய்கையை மேற் கொண்ட விவசாயிகள் நெல் அறுவடைக்குப் பின் தமது வயல்களில் கௌபீ, பயறு, உழுந்து, எள்ளுப் போன்ற பயிர்களை விதைத்து மேலதிக இலாபத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

அத்துடன் வரட்சி, வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மேற்படி பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் இழந்த நட்டத்தையும் பெறக்கூடிய வாய்ப்பு உண்டாகும். மேற்கூறிய அவரையினப் பயிர்களை வயல் நிலங்களில் பயிரிடுவதன் மூலம் எமது மாவட்டத்தேவையின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்பு உருவாகின்றது.

அவரையினப் பயிர்கள் குறைந்த நீர்த்தேவையுடன் சிறந்த பலனைத் தரக்கூடியவையாகும் இவ்வகைப் பயிர்கள் காற்றில் உள்ள நைதரசனை நிலத்தில் நிலைப்படுத்துவதால் நெல் வயல்களில் மண்வளம்பேணப்

### விவசாயம்

படுகின்றது. அத்துடன் பயிர்க் கழிவுகள் மண்ணுடன் சேர்வதால் மண் வளமடைகின்றது. இதனால் அடுத்துவரும் காலபோகத்தில் நெல்விளைச்சல் அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

மேலும், அவரை இனங்களால வயல் நிலங்களில் களை கட்டுப்படுத்தப்படுகின்றது. அவரையினப் பயிர்களைக் குறைந்த மூலதனத்துடன் இலகுவாகப் பயிரிடலாம். போசாக்குப் பெறுமானம் கூடிய உணவுப் பொருள் ஆகையால் எமது

(9 ஆம் பக்கம்பார்க்க)



## சாயி சிந்தனை

சில குழந்தைகள் வளைந்து உட்காருகிறார்கள். அவர்கள் நேராக நிமிர்ந்து உட்கார வேண்டும். முதுகுத் தண்டு நேராக இருந்தால்தான் எண்ணங்கள நேராக புத்திக்குச் செல்லும். அப்போதுதான் ஒரு முனைப்பு (Concentration) அபிவிருத்தி அடையும். முதுகுத் தண்டில் (Spinal Column) 33 வளையங்கள் இருக்கின்றன. 9 இல் இருந்து 12 ஆம் வளையத்தில் சுஷும்னா நாடி இருக்கிறது. நேராக நிமிர்ந்து உட்கார்ந்தால் குண்டலினி சக்தி சஹஸ்ராரத்துக்கு நேராகச் செல்லும்.

குண்டலினி சக்தி என்றால் என்ன? யோகமார்க்கத்தை பின்பற்றுபவர்கள், குண்டலினி சக்தி என்பது மூலாதாரம் என்ற இடத்தில் நாகத்தின் வடிவில் உள்ளது என்றும் அது நேராக சஹஸ்ராரத்தைச் சென்றடைகிறது என்றும் கூறுவர். அது மூலாதாரத்தில் தான் தங்கியுள்ளது. யோகப் பயிற்சியில், பிராணாயாமம் செய்யும்போது, மூச்சு உள்ளிழுக்கப்பட்டு நிறுத்தப்படுகிறது. (கும்பகம்) அந்நேரத்தில் தான் இருக்குமிடத்தில் காற்று இல்லாததால் குண்டலினி சக்தி மேல் நோக்கிச் செல்கிறது அது நாகமல்ல. அது ஒரு வகையான வாயு, காற்று. அது 33 வளையங்கள் வழியாகச் செல்லுகிறது. அது மேலே செல்வதற்காக, நீ நேராக நிமிர்ந்து உட்கார வேண்டும். அது மிகவும் சிறந்தது. நினைவுத்திறன் அதிகரிக்கும். ஒரு முனைப்பு (Concentration) அடைதலும் எளிது. உட்காருவதிலும் ஓர் ஒழுங்கு இருக்கிறது. இத்தகைய ஒழுக்கநெறி சீராக அமைய வேண்டுமெனில், தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆதாரம்:-
**பிரசாந்தியில் அருந்தவர்ஷிணி**

# மக்களை சிவநெறியில் இட்டுச்சென்ற யோகிகள் வாழ்ந்த சிறப்புடைய கைதடி

## நூல்வெளியீட்டு விழாவில் பிரதேச செயலர்

கைதடி, மார்ச் 4

புண்ணிய சீலர்கள் வாழ்ந்த பூமி கைதடி. யோகர்சுவாமி, மார்க்கண்டு சுவாமி, சச்சிதானந்த சுவாமி போன்ற ஆன்மீக யோகிகள் இறைவழிகாட்டி, இக்கிராமத்திலேயே நடமாடி வாழ்ந்து மக்களைச் சிவநெறியில் இட்டுச் சென்றுள்ளனர்.

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் அண்மையில் நடந்த சச்சிதானந்த சுவாமி குருபூசை மற்றும் ''ஞான நிட்டை'' நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் தென்மராட்சி பிரதேச செயலர். பு. சுந்தரம் பிள்ளை இவ்வாறு கூறினார்.

விழாவுக்கு இ.குழந்தைவடிவேலு தலைமை வகித்தார். ''ஞான நிட்டை'' பாடல்களை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் நா.வி.மு. நவரத்தினம் பாடினார்.

''ஞான நிட்டை'' நூலை வெளியிட்டு வைத்து யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன் பேசுகையில் கூறியதாவது:—

மனக் குழப்பம், போகம், வேதனை, போராட்டம் இவைகளைப் போக்குவதே ஞான நிட்டை. உடலைவிட உள்ளத்தை ஞான நிலைக்கு இட்டுச் செல்வதே 'மானசந்வசு' என்று பகவத்கீதை கூறுகிறது.

மன அமைதி, அன்புடைமை, பக்குவம், தன்னடக்கம், உளத் தூய்மை ஞானத்தை நல்கும். பிறருக்காக வாழ்பவன் ஞானி. மோனம் என்பது ஞான ரம்பு— என்றார்.

நூல் ஆய்வுரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலைவாணி இராமநாதன் பேசுகையில் கூறியதாவது :-

அறிவின்றி வாழினும் வாழலாம்; ஆனால் உணர்வின்றி உயிர்வாழ முடியாது ஞானிகள் தம்மையே ஆய்வுகூடமாகக் கொண்டு ஆன்மீக முடிவுகளைக் கூறுகிறார்கள். நாம் அவற்றை ஏற்க மறுக்கிறோம் ஆனால் விஞ்ஞானிகள் தம் ஆய்வு கூடத்தில் கண்ட முடிவுகளைத் தயங்காது ஏற்கிறோம்.

இந்நூலில் உள்ள 10 பாடல்களிலும் ஞான நிட்டை என்றால் என்ன? அதனை எவ்வாறு அடையலாம் என்பதைச் சுவாமி சச்சிதானந்தர் தமது அனுபவ முத்திரையாகத் தந்துள்ளார் பேரானந்தத்தைப் பெறுதலே தியானம். பரம்பொருளுடன் ஒன்றியிருத்தலே பேரின்பம். அறத்தையும், அன்பையும், சேவையையும் இணைத்தலே யோகம். புகழுக்கு ஆரவாரப்படாமல், துன்பத்தில் துவளாமல் சமநிலைபேணலே உண்மையான ஞான நிட்டை— என்று சொன்னார்.

இப்பாடல்களுக்கு விளக்கவுரை எழுதிய டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதனும், இந்நூலை வெளியிட உதவிய விழாவின் கௌரவ விருந்தினர் த குகனேசனும் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணனால் பொன்னாடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். டாக்டர் ப சின்னப்பு, முதலியார் சு. இராமலிங்கம் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன் பதிலுரை வழங்கினார். விழாவில் அன்னதானமும் வழங்கப்பட்டது.

(அ-74)

### நாளை

மாசி 21
வெள்ளிக்கிழமை
திதி: திருதியை
பிற்பகல் 3.47 வரை.
நட்சத்திரம்: அத்தம்
முற்பகல் 9 24 வரை
சுபநேரம்: 6.26- 7 36
ராகுகாலம்: 10.56 -12 26
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரம்)

### உதய வாக்கு

ஒருவன் கீழே விழுந்தால் உலகமே அவன் மீது ஏறி மிதிக்கும்
—அமெரிக்கப் பழமொழி

### தவக்காலச் சிந்தனை-16

ஆலயங்கள் செல்வதிலும் ஆன்மீகக் கடமைகளை நிறைவேற்றுவதிலும் முழுமையாக செய்துவிட்டோம் என பலரும் பாராட்டுகிறார்கள் உலகில். பகையுள் பிறருக்கு அன்பு காட்டுவதிலும் அயலில் உறவாடுவதிலும் ஒதுங்கி வாழ்பவராக தனுண்டு தன் கடமை உண்டு, தன் வாழ்வு உண்டு என தன் சுயநலத்தில் மற்றவர் புழ்ந்கடி வெளிவேடக்காரராக வாழ்வோரைக் கண்டு நல்ல சமாரியன் உவமை மூலம் விளக்கிய இறைவன் —

இம் மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகிறார்கள். இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலைவில் இருக்கிறது மனிதக் கட்டளைகளைகோட்பாடுகளைக், கற்பிக்கின்றனர். இவர்கள் என்னை, வழிபடுவது வீண் என்கிறார்

மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக உங்கள் வழிபாடுகளை சிறப்பிக்காது வாழ்வோடு வழிபாடும் கருத்துள்ளதாக இணைந்தாலே இறைவனுக்கு ஏற்றதாகும் பார்வை அற்ற ஒருவர் பார்வை அற்ற ஒருவரை வழிகாட்ட முடியாது. பயணப் பாதையைச் செம்மையாக்க தியானமும் தவமும் சிந்தனையும் சிறக்கட்டும்

—யோசப் பாலா

### கும்பாபிஷேகம்

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி (சிவன்) கோயிலின் மகாகும்பாபிஷேகம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. (ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுப் பயிற்சி பெறுவோருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு கிடைக்கும்

அரியாலை, மார்ச் 4

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் பணியாளர்களுக்கு மாதாந்தம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கும் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை வடக்கு — கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் ஆர். கனகரத்தினம் கூட்டுறவுத் திணைக்களத்திற்கும் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் விடுத்துள்ளார்.

கூட்டுறவுத் துறையில் திறமையை மேம்படுத்தலும் கூட்டுறவுப் பயிற்சி பெறும் மாணவரின் நலன் கருதியும் கூட்டுறவுப் பணியாளர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்த நடைமுறை கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி நொடக்கம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் இத் திட்டம் யாழ்ப்பாணத்தில் இன்னும் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை. சுற்றறிக்கை சென்ற மாத இறுதியிலேயே இங்கு கிடைத்துள்ளதால் விரைவில் இத் திட்டம் அமுல் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17-86)

# நெல்லைக் கையிருப்பில் வைத்திருக்க உத்தரவு

கொழும்பு, மார்ச் 4

எதிர் காலத்தில் அரிசிப் பற்றாக்குறையைத் தவிர்க்கும் முகமாக 30 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியைப் பெறக் கூடியளவு நெல்லைக் கையிருப்பில் வைத்திருக்கும் படி கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்துக்கு அமைச்சரவை உப குழு உத்தரவிட்டுள்ளது.

நெல்லைக் கொள்வனவு செய்வதற்கென கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்துக்கு கடன் வழங்கும் படி மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றுக்கும் அமைச்சரவை உப குழு உத்தரவிட்டுள்ளது.

(ஐ-6)

# தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுவதற்கு ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 4

தேர்தல் சுவரொட்டிகளை அகற்ற பொலிஸாரால்முடியாவிடின் தேர்தல் திணைக்களம் அந்தப் பணியைப் பொறுப்பேற்கும் எனத் தேர்தல் ஆணையாளர் தேர்தல் கண்காணிப்புக் குழுவிற்கு வாக்குறுதியளித்துள்ளார்.

விளம்பரங்களையும் பதாதைகளையும் அகற்றுமாறு தான் ஏற்கனவே பொலிஸாருக்குப் பணிப்புரைகளை விடுத்துள்ள போதிலும் பொலிஸார் அந்தப் பணியை இன்னும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிகிறது எனவும் இவ்வாறான சூழ்நிலையில் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு வசதியாக விளம்பரங்களை அகற்றும் பணியை தேர்தல் திணைக்களம் பொறுப்பேற்க நேர்ந்துள்ளது எனவும் திணைக்கள நிதியைச் செலவிட்டோ அல்லது வேறு வகையிலோ விளம்பரங்கள் அகற்றப்படும் எனவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயகா தேர்தல் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் தனதுபணிப்புரையைப் பொலிஸார் நிறைவேற்றுகிறார்களா? இல்லையா என்பதைக் கவனிக்க சில தினங்கள் பொறுத்திருந்து பார்க்கவுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

(ஐ-10)

# இலங்கை வங்கிக் கிளையை ஊர்காவற்றுறைக்கு மாற்றுக

## வர்த்தகர் சங்கம் கோரிக்கை

இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக் கிளை மீண்டும் ஊர்காவற்றுறையிலேயே இயங்க வேண்டும். ஊர்காவற்றுறையில் இயங்கி வந்த இலங்கை வங்கிக்கிளை, இராணுவ நடவடிக்கைகளாலும் இடம் பெயர்வாலும் தற்போது வேலணையில் இயங்கி வருகின்றது. இக்கிளையின் கூடுதலான வாடிக்கையாளர்கள் ஊர்காவற்றுறைப் பகுதியைச் சார்ந்தவர்களாகும். இவர்களில் வர்த்தகர், ஓய்வூதியம் பெறுவோர், அரச ஊழியர், வெளிநாட்டு ஊதியம் பெறுவோர் ஆகியோர் அடங்குவர். எனவே இவர்களது நலன் கருதியும், சட்ட பூர்வமாகவும் இக்கிளையை மீண்டும் ஊர்காவற்றுறைக்கே மாற்ற வேண்டும்.

ஊர்காவற்றுறை வர்த்தக சங்கத்தலைவர் வ. அஞ்சலோ தலைமையில் நடைபெற்ற சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ். அரச அதிபருக்கும், வங்கி உயர் அதிகாரிகளுக்கும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருக்கும் இத் தீர்மானத்தின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

(ஐ-16)

ALL PURPOSE MULTI DIRECTIONAL

KOBE-52

TV/RADIO ANTENNA

பொருத்துவதற்கு இலகுவானது

- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON

18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junction,
Colombo 4. Tel : 589992

AVAILABLE ISLANDWIDE

(சி/6492)

# மெய்வல்லுநர் போட்டிகள்

கொழும்புத்துறை, மார்ச் 4

யாழ். திருமறைக் கலாமன்ற சிறுவர் கலைக்கூட மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 6 ஆந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளன.

★ ★ ★

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி. மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசாவும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஆ. வ. கணேசலிங்கம், சி. செல்லையா, வீ. பாலசிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலனும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-28)

★ ★ ★

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும், சிறப்பு விருந்தினராக நல்லூர் உதவிக் கல்விப்பணிப்பாளர் ச. காங்கேயனும் கலந்து கொள்ளவுள்ளனர். [க-18]

★ ★ ★

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் செ. குபேரநாதன் தலைமையில் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்வித்திணைக்கள பொறியியலாளர் த. சிவபாலன் பிரதம விருந்தினராகவும், வலிகாமக்கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி) வீ. பாலசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக புவனேஸ்வரி அம்பாள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்களும், மானிப்பாய் வட்ட லயன்ஸ்கழகமுன்னாள் பிராந்தியத் தலைவர் லயன் எஸ். எஸ். தங்கராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

[க]

# பயணிகள் மண்டபம்

நயினாதீவு இறங்கு துறைப் பகுதியில் பயணிகள் தங்கி இளைப்பாறுவதற்கு ஏற்றதான பயணிகள் தரிப்பிடமொன்றினை அமைப்பதற்கென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் சுமார் ஐந்து [illegible] வேலணை பிரதேச செயலகத்திற்கு வழங்கியுள்ளது. (ஐ-167)

## வாசகர் திருமுகம்

# வளலாய் வளராதா?

வளலாய் வெளிநாட்டுப் பணத்தாலோ அல்லது அரச நன்கொடைகளாலோ உயர்ந்த பகுதியல்ல. உடலுழைப்பை நம்பி வளமாக, வசதியாக வாழ்ந்த விவசாயிகள் நிறைந்த கிராமம் காலத்தின் கோலத்தால் இம்மக்கள் ''வனவாசம்'' 'அஞ்ஞாத வாசம்' எல்லாம் முடித்து மீளக் குடியேறுகின்றனர்.

நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த இரவு பகல் பாராது உழைத்துக்கட்டிய வீடு வாசல்கள், பொது நிலையங்கள் இடிக்கப்பட்டு மண்ணோடு மண்ணாக சிங்கராஜா வனம்போல காட்சியளிக்கும் ''வளலாய்க் காட்டை'' வெட்டி மக்கள் குடியேறுகின்றனர். இப்போது ஓலைக் கொட்டில்களில் வாழ்கின்றனர். அபிவிருத்தி, புனரமைப்பு என்று அடிக்கடி பேசும் அரசாங்க அதிகாரிகள் புனரமைப்பு எங்கு தேவை என்பதை அறியாது அலைகின்றனர்.

வளலாய் மற்றும் அதனை அண்டிய கிராமப் பகுதிகளில் பல கல்விமான்களையும், புத்திஜீவிகளையும் உருவாக்கிய வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அழிந்து பற்றைகளாலும் செடிகளாலும் மூடப்பட்டு சரணாலயம் போல் காட்சி தருகின்றது. இப்பாடசாலை இயங்காததால் தற்போது மீளக்குடியேறிய மக்களின் பிள்ளைகள் வேறு பாடசாலை செல்ல வேண்டியுள்ளது. 118 ஆண்டு பழைமை வாய்ந்த பாடசாலை, 1990 வரை நல்ல நிலையில் இயங்கியதுடன் இரண்டுமாடிக்கட்டடம் ஒன்றுக்கான அடித்தளவேலைகளும்பூர்த்தியான நிலையில்இருந்தது.

இப் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் போன்றோர் அரைத்தூக்கத்தில் உள்ளதாலும், முன்னைய கோட்டக்கல்விமற்றும் கல்வி அதிகாரிகள்மறந்துவிட்டதாலும் பந்தம்,செல்வாக்கு என்பவற்றை அறியாமல் சொல்வாக்கை மட்டும் நம்பி இப்பகுதி மக்கள் தமது பாடசாலையின்எதிர்காலம்பற்றிக்கவலையுறுகின்றனர்

அழிந்து விட்ட வளலாயின் அபிவிருத்தி, புனரமைப்பு எல்லாம் கஞ்சிக்குள் பயறு போட்டது போன்று ஆமை வேகத்தில் நகர்கின்றன. மேகம் கறுத்து விட்டால் கறையான் அரித்த வீட்டுக் கூரையைப் பார்க்கும் இப்பகுதி மக்களுக்கு அபிவிருத்தி, புனரமைப்பு, மாதிரிக் கிராமம் எல்லாம் வெறும் பத்திரிகைச் செய்திகள் மட்டும் தானா? இவர்களது வாழ்க்கை வளம் பெறுவது எப்போது?

கடந்த 14வருடங்களாக பல்வேறு வகையானகடும் பாதிப்புக்களுக்கு உள்ளாகி பல ஆண்டு காலம் பின்னோக்கித்தள்ளப்பட்ட வளலாயின்உடல், உள ரீதியாக வேதனையுறும் மக்கள் சார்பில் இதனை எழுதுகிறேன்.

வளலாய். **மா. சந்திரசேகரன்**

# 2000 ஆண்டில் பெப்ரவரி மாதம்

கடந்த 13 - 01 - 99 ''உதயன்'' பத்திரிகையில் 8 ஆம் பக்கத்தில் வெளிவந்த செய்தி குழப்பமாக உள்ளது. அச்செய்தியின் படி 2000 ஆண்டில் பெப்ரவரி மாதத்தில் 30ஆம் திகதி வரும் என்று கூறப்பட்டிருந்தது. அப்படியாயின் அந்த ஆண்டில் மொத்தமாக 397 நாள்கள் வரவேண்டும்.

1) 2000 ஆண்டிலும் பெப்ரவரியில் 29 நாள்கள் இடம் பெறும். 366 நாள்களைக் கொண்ட வழமையான நெட்டாண்டாகவே அமையும்.

2) நெட்டாண்டு கணிக்கப்படும் பொழுது பின்வரும் விதிகள் பின்பற்றப்படும்.

அ) நான்காண்டுகளுக்கு ஒருமுறை கடைசி இரு இலக்கங்களும் நான்கினால் வகுக்கப் படக்கூடியதாக இருந்தால் அவ்வருடங்கள் 366 நாள்களைக் கொண்ட நெட்டாண்டுகளாக (லீப் வருடங்களாக) அமையும். உதாரணம்; 1948, 1952, 1956, 1960, 1980, 1984, 1988 முதலியன:

ஆ) நூற்றாண்டுகளாக இருந்தால் முதல்இரு இலக்கங்களும் நான்கினால வகுக்கப்படக் கூடியனவாக அமைய வேண்டும். உதாரணம் 1700, 1800, 1900 நெட்டாண்டுகளாக இருக்கவில்லை. 2000 நெட்டாண்டாக அமையும். 20 நான்கினால் வகுக்கப்படக் கூடியதே.

இ) நூற்றாண்டுகளைப் பொறுத்தவரையில் 400 ஆண்டுகளுக்கொரு முறையே நெட்டாண்டுகள் வரும். உதாரணம்: 1600, 2000, 2400, 2800 இப்பொழுது பின்பற்றப் பட்டுவரும் கிறகொறியன் கலண்டர் (Gregorian Calendar) கி. பி. 1582 இல் இத்தாலியில் அறிமுகம் செய்யப்பட்டது. 1752 தொடக்கம் பிரித்தானியாவும் பின்பற்றி வருகிறது.

ஈ) புவி ஒரு முறை சூரியனைச் சுற்றிவர எடுக்கும் நேரம் 365 நாள்கள் 5 மணி 48 நிமிடம் 46 விநாடிகள்.

இதனை $365\frac{1}{4}$ எனக் கணித்தே நான்கு வருடங்களுக்கு ஒருமுறை 366 நாள்கள் அடங்கிய நெட்டாண்டு அமைக்கப்பட்டது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் 11 நிமிடம் 14 விநாடி நீளமான ஆண்டாக அமைகிறது. எனவே தான் திருத்தம் செய்வதற்காகவே 400 ஆல் வகுக்கப்படக் கூடிய நூற்றாண்டுகள் மாத்திரமேநெட்டாண்டுகளாகஅமைக்கப்பட்டுள்ளன:

எனவே 2000 ஆண்டு 366 நாள்களைக் கொண்ட ஒரு வழமையான நெட்டாண்டாகவே அமைந்திருக்கும். பெப்ரவரியில் 30 ஆம் திகதி வரமாட்டாது.

கொழும்புத்துறை; **வை. மகாதேவன்,**

(ஓய்வுபெற்ற அதிபரும், புவியியல் ஆசிரியரும்)

[மேற்கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்படும் அதே கருத்தை யாழ்ப்பாணம், சி. இரத்தினவடிவேல் 16 - 02 - 99 வெளியான வாசகத்திருமுகம் பகுதியில் குறிப்பிட்டிருந்தார்.

உதயன் 13 - 01 - 99 இதழில் வெளியான செய்தி தமிழகத்தில் இருந்து வெளிவரும் ''ஓம் சக்தி'' என்ற சஞ்சிகையின் 1999 ஜனவரி இதழில் வெளியான தகவலை அடிப்படையாகக் கொண்டு பிரசுரிக்கப்பட்டதாகும். (ஆ-ர்)]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடகள விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். பிரதேச செயலர் பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் இருதினங்களுக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இறுதித் தினமான 7 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். மேலதிக அரசாங்க அதிபரும், யாழ். பதில் பிரதேச செயலருமான து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் விளையாட்டு விழாவில் யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும்—யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

# கொழும்பிலிருந்து 'ஹண்டி' கப்பல் வடக்கே வருவதில் தாமதம்

## தினமும் 3 லட்சம் ரூபா இழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

அத்தியாவசியப் பொருள்களுடன் வடக்கே வருவதற்கு 'ஹண்டி' கப்பலுக்கு இதுவரை அனுமதி கிடைக்காததால் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தினமும் மூன்று இலட்சம் ரூபாவை இழக்கவேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களைக் கடந்த 25ஆம் திகதியுடன் ஏற்றிமுடித்த ஹண்டி கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே தரித்து நிற்கின்றது.

பருத்தித்துறையில் இரு கப்பல்கள் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதால் மற்றொரு கப்பலை அங்கே அனுப்ப முடியாத நிலை உள்ளதால், 'ஹண்டி' கப்பல் வடக்கே செல்ல அனுமதிக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'ஹண்டி' கப்பல் பொருள் ஏற்றி முடித்தும் வடக்கே வர அனுமதிக்கப்படாததால் தினமும் வீணாக மூன்று லட்சம் ரூபாவைக் கட்டணமாகச் செலுத்தவேண்டியுள்ளதாகக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்தியாவசியப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய நாம் எவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில் பொருள்களைஏற்றி வர ஏற்பாடு செய்த போதும் அதற்கு முட்டுக்கட்டைவிதிக்கப்பட்டுள்ளதே என்று அந்த வட்டாரங்கள் கவலை வெளியிட்டன.

பருத்தித்துறையில் தற்சமயம் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'ஹெந்தல' கப்பலும் கொழும்பில் தரித்து நிற்கும் 'ஹண்டி' கப்பலும் மேர்க்கண்டையில் கப்பல் நிறுவனத்தின் கப்பல்கள் என்பதால் 'ஹண்டி' கப்பலை பருத்தித்துறைக்கு அனுப்புமாறு கூட்டுறவுச் சங்கங்கள் உயர் மட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளன.

பருத்தித்துறையில்பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ''ஓஷன் சக்ஸஸ்'' கப்பல் தனியாருக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகின் தென்மராட்சி பிராந்திய நிலையத்தில் நடைபெற்று வந்த அடிப்படை நில அளவியலும் படவரைகலையும் என்னும் கற்கைநெறிக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த ஞாயிறன்று சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

எம். பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி விழாவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் க. சந்திரசேகரா பிரதம விருந்தினராகவும் யாழ். நில அளவைத் திணைக்கள பிரதி அத்தியட்சகர் பி. சிவதாஸ் யாழ் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் யோ. ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ஐ-7)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாண குடாநாட்டில் தொடரும் வீதிவிபத்துக்களில் நேற்றும் இருவர் காயம் அடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற பொலீஸ் பிக்கப்—சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றவரான நுணாவிலைச் சேர்ந்த தம்பிமுத்து கந்தசாமி (வயது 64) என்பவரும் கோண்டாவிலில் இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கிடையில் இடம்பெற்ற விபத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குலேந்திரன் (வயது 33) என்பவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

# நயினாதீவு படகு சேவையை சீர் செய்யுமாறு கோரிக்கை

## அரச அதிபருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

நயினாதீவுக்கான கடற் போக்குவரத்துச் சேவையை உடனடியாக அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று நயினாதீவு யாத்திரிகர் நலன் புரிச் சேவைக்கழகம் யாழ். அரசாங்க அதிபருக்கு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி கழகம் யாழ். அரச அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நயினாதீவுக்கான தரைப் போக்குவரத்து ஓரளவுக்கு சீர் செய்யப்பட்டிருப்பினும் கடற்போக்குவரத்து அவலம் நிறைந்ததாகவும் மிக அரிதாகவுமே காணப்படுகின்றது.

தனியார் வசம் தரமான படகுகள் அற்ற நிலையில் தற்சமயம் இச்சேவை சீர்குலைந்துள்ளது.

பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களது வழிபாட்டுத் தலமாக விளங்கும் நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்திற்கு தினமும் யாத்திரிகர் சென்று வருகின்றபோதும் உரிய நேரங்களில் அவர்கள் சென்று திரும்ப முடியாத நிலையிலுள்ளனர்.

எனவே அடியார்களின் தினசரி வழிபாட்டிற்கு உதவும் முகமாக குறைந்தது இரு படகு சேவைகளையாவது நடத்த ஏற்பாடு செய்து தர வேண்டும்.

இவ்வாறு அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-5)

## மரண விசாரணை அதிகாரியை நியமிக்குக

வேலணை, மார்ச் 4

வேலணைப் பகுதிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. வேலணை பிரதேச சபையின் மாதந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(ஐ-167)

## மலசல கூட வசதி இல்லை

கோண்டாவில், மார்ச் 4

உரும்பிராய் வடக்கில் உள்ள அரசாங்கக் குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு மலசல கூட வசதி செய்துகொடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பெண்கள், குழந்தைகள் வசிக்கும் இப்பகுதியில் குடிதண்ணீர் வசதியும் குறைவாகவே உள்ளது. [இ-ரி]

## அமைதி வேண்டி வழிபாடு

கைதடி, மார்ச் 4

கைதடி தக்கடியன்புலம் ஞானவைரவர் ஆலயத்தில் சமாதானமும், அமைதியும் வேண்டி விசேட பூசை வழிபாடுகளும் பிரார்த்தனையும் மாசி மகத்தன்று நடைபெற்றன.

வழிபாட்டில் ஈடுபட்ட பக்தர்கள் அனைவருக்கும் மதிய மகேசுர பூசை இடம் பெற்றது. (ஐ-74)

## கருத்தரங்கு

தேசிய கலை இலக்கியப் பேரவை தனது 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திறனாய்வியல் தொடர் கருத்தரங்சொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இதன் முதலாவது அமர்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கவிஞர் இ. முருகையன் தொடக்கவுரை நிகழ்த்துவார். பேராசிரியர் நா. சுப்பிரமணியன் கருத்துரை வழங்குவார். (இ-27)

## சூடிப்புப் படங்குகள்

வேலணை, மார்ச் 4

வேலணைப் பகுதிகளில் காலபோக நெற்செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகள் தம்மிடம் சூடிப்புப் படங்குகள் இல்லை எனத் தெரிவிததைதயடுத்து அவர்களுக்கான படங்குகளைப் பெற்றுத் தருவதாக வேலணை கமநல கேந்திர நிலைய அதிகாரி வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

[ஐ-167]

## சந்தையில் வைத்து இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 4

மானிப்பாயிலுள்ள நலன்புரி முகாம் ஒன்றில் வசிக்கும் இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் படையினரால் கடந்த 1 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் சோதி வேம்படி ஒழுங்கை செல்லமுத்து நலன்புரி முகாமைச் சேர்ந்த தங்கராசா தசிகரன் (வயது 19) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

சுன்னாகம் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்துவரும் இவரை மேற்படி சந்தையில் வைத்தே படையினர் கைது செய்தனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

## சேதமடைந்த நிலையில் இயங்கும் ச. ச. நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

விமானக் குண்டு வீச்சினால் சேதமடைந்த நிலையிலுள்ள குருநகர் புதுமை மாதா ச.ச. நிலையம் சேதமடைந்த கட்டடத்தின் ஒரு பகுதியில் கடந்த ஒருமாதமாக இயங்கி வருகிறது.

கட்டடம் திருத்தம் செய்யப்படாத நிலையிலும் பொதுமக்களின் நன்மை கருதி இந்தச் சனசமூக நிலையம் தற்பொழுது செயற்பட்டு வருகிறது.

1995 ஆம் ஆண்டில் இப்பகுதியில் நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் மேற்படி ச.ச. நிலையம் சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

# காணாமற் போனோர் தொடர்பான ஆணைக்குழு யாழ்ப்பாணம் வருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 4

1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றது.

யாழ். செயலகத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ள இந்த ஆணைக்குழுவுக்கு திருமதி மனோஹரி சரத்முத்கேட்டுகம தலைமை வகிப்பார்.

இந்த ஆணைக்குழுவில் உறுப்பினர்களான சிறைச்சாலை முன்னாள் ஆணையாளர் ஹெட்டிகமகே தர்மசேன, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பொ. பாலவடிவேல் ஆகியோரும் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

பிரஸ்தாப ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் செய்தவர்களை மேற்படி விசாரணைக்கு நேரில்சமுகமளிக்குமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எம். சி. எம் இக்பால் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

முறைப்பாடு செய்தவர்களுக்கான கடிதங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-3-5)

## குஞ்சு பொரிக்க வைக்கும்

# 90 இயந்திரங்களை யு. என். டி. பி. வழங்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். மாவட்டத்தில் இதுவரையும் பற்றறி மூலம் கோழிக்குஞ்சு பொரிக்கும் 90 இயந்திரங்கள் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை, வேலணை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே இந்த இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை —

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக அங்குள்ள பயனாளிகளுக்கு மூன்று இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக ஐ. நா. அபிவிருத்தித் திட்ட சிரேஷ்ட திட்ட அதிகாரி திருமதி ஞானா சிவபாலசுந்தரம் தெரிவித்தார். [ஐ-5]

## முகாமைத்துவ கற்கைநெறி

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகின் தென்மராட்சிப் பிராந்திய நிலையத்தில் 4 ஆவது அணியினருக்கான ''அலுவலக முகாமைத்துவம்'' என்னும் கற்கைநெறி எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகமேற்படி நிலையஇணைப்பாளர் [illegible] ஜெயக்குமார் தெரிவித்தார். (இ-7)

## பெண் காயம்

சகோதரனை எவரோ அடிப்பதாக அறிந்து அந்த இடத்துக்கு ஓடிச் சென்ற பெண் தாக்குதலுக்கு உள்ளாகித்தலையில் காயமடைந்தார்.

பளை, வண்ணாங்கேணியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குணபாலசிங்கம் விஜயகௌரி (வயது 22) என்ற இளம் குடும்பப்பெண்ணே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (இ-15)

**வயல்...**

(7 ஆம் பக்கத் தொடர்)

மாவட்ட மக்களின் ஒருபகுதி போசாக்கைப் பேணக் கூடிதாக அமையும்.

மானாவாரியாக ஒருபோகம் மட்டும் நெற்செய்கை மேற்கொள்ளும் வயல் நிலங்களில் தொடர்ந்து அவரைப் பயிர்கள் பயிரிடும்போது சூழல் சுகாதாரம் பேணப்படுகின்றது.

எனவே இந்த ஆண்டு பெரும்பாலான வயல் நிலங்களில் போதிய ஈரம் இருப்பதனால் உரியநேத்தில் மேற்கூறிய அவரை இனங்களில் விவசாயிகள் தாம் விரும்பிய இனத்தை விதைத்து அறுவடை செய்ய வேண்டும். அதன் மூலம் தாமும் பயன்பெற்று அயலவர்களும் பயன் பெறுவதுடன் குடாநாட்டு மக்களும் பயன்பெற வழி வகுக்கலாம், வயல் மண்ணும் வளம்பெற உதவலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு யுத்தம் முடிந்த பின்பே கண்ணி ஒப்பந்தத்தில் கைச்சாத்து

## இலங்கை அரசு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 4
''நாடு இன்று எதிர்நோக்கும் யுத்தம் காரணமாகவே நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் சர்வதேச ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை. யுத்தம் முடிவடைந்ததும் இலங்கை அதில் கைச்சாத்திடும்''

வெளிவிவகார அமைச்சின் தகவல் பணிப்பாளர் ரவிநாத் ஆரிய சிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

132 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. அமெரிக்கா, இலங்கை போன்ற நாடுகள் கைச்சாத்திடவில்லை.

இதுகுறித்து ரவிநாத் ஆரிய சிங்க மேலும் தெரிவிக்கையில் உலகில் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் ஒப்பந்தத்தை இலங்கை வரவேற்கின்றது. ஆனால் செயல்முறையில் சில காரணங்களினால் தான் இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

இந்தநாடு இன்று கொடிய யுத்தமொன்றை எதிர்நோக்குகின்றது. இலங்கை போன்ற நாடுகள் தமது பாதுகாப்புக் கருதி கண்ணிவெடிகளைக் கையாளவேண்டிய நிலை இருந்து வருகிறது.

எதிரிகளின் வருகையை அறிந்துகொள்ளப் படை வீரர்களை ஈடுபடுத்துவதை விட முகாம்களைச் சுற்றி கண்ணிவெடிகளைப்புதைத்து வைப்பது இலகுவானதாகும்.

இப்படி அவர் கூறினார். (இ-21-01)

---

## மாகாணசபை...

[முதலாம் பக்கத் தொடர்]
திகதி சமய விவகாரத்தைக் கிளப்பியுள்ளது. ஆகவேதேர்தல் திகதியை மாற்ற அனுமதி தரவேண்டும்'' என்று கேட்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகள் சட்டத்துக்கமைய இந்தத் தேர்தல்களை ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதிக்கு முன் நடத்தக்கூடிய சூழ்நிலை உண்டு என்றும் —

ஒத்திவைக்கப்பட்ட மாகாணசபைகளுக்கான தேர்தல்களை மூன்று மாத காலத்துக்குள் நடத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்புப்படி தேர்தல் ஆணையாளர் ஏப்ரல் முதலாம் திகதிக்கு தேர்தலை நடத்த அறிவிப்பை விடுத்தார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

மாகாணசபைகள் சட்டப்படி தேர்தலைப் பிறிதொரு திகதிக்கு மாற்றவே உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

---

## ஏனையோரை...

[முதலாம் பக்கத் தொடர்)
லியடிப் பொலீஸாருக்கு இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

சந்தேகநபரான கோபுவை இம்மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தலையற்ற உடல் கண்டுபிடிக்கப்பட்ட வீட்டில்வசித்து வந்ததாகக் கூறப்படும் கணவன், மனைவி, பிள்ளைகள் உட்பட குடும்பம் ஒன்று தலைமறைவாகியுள்ளதாகப்பொலீஸார் பதில் நீதிவானிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து இவர்களையும் சம்பந்தப்பட்ட ஏனையோரையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பருத்தித்துறைப் பதில் நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (இ-173)

---

## தடுத்து...

[முதலாம் பக்கத் தொடர்]
★ திருநாவுக்கரசு குமாரதாஸன் (வயது 18) — கொக்குவில் மேற்கு, கேணியடி.

ஆகியோரே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களால் அனுப்பப்பட்ட கடிதங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் உள்ளன என்றும். இவர்களின் உறவினர்கள் அலுவலகத்துக்கு வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் ஆணைக்குழு அதிகாரி எஸ். சிறீதரன் தெரிவித்தார். (உ-6-7)

---

## நிரந்தர...

(முதலாம் பக்கத் தொடர்)
இந்தச் சேவையை நடத்த தேவையான கப்பலைப் பெறுவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

பல நிறுவனங்கள் கேள்விகளைச் சமர்ப்பித்துள்ளன.

அவை ஆராயப்பட்டு எந்தக் கப்பலைப் பெறுவது என முடிவு செய்து கப்பலைத் தெரிவு செய்வோம்.

இக்கப்பல் சேவையை அரசாங்கம் நடத்துவதா அன்று சர்வதேச அமைப்பின் உதவியுடன் நடத்துவதா என்பது குறித்து இன்னும் முடிவாகவில்லை—

இப்படி அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-3)

---

## கல்வி நிர்வாக...

(முதலாம் பக்கத் தொடர்)
கள்.

இவர்களில் யாழ். மாவட்டத்துக்கு 17 பேர் நியமனம் பெற்றுள்ளனர். ஆனால் நேற்று நியமனக்கடிதம் பெற எவரும் சமுகமளிக்கவில்லை.

யாழ். மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள கல்வி வலயங்களில் இவர்கள் நியமனம் பெறுவர்.

'வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 361 நிர்வாக அதிகாரிகள் தேவையென மதிப்பிடப்பட்டிருந்தது தற்சமயம் பணிபுரியும் 83 பேருடன் புதிதாக நியமனம் பெறுபவர்கள் பணிபுரிவர்' என்று ஆளுநர் அந்த வைபவத்தில் தெரிவித்தார். (இ-3)

---

# ப.நோ.கூ. சங்கங்கள் மீதிபொருளை தனியாருக்கு விற்கமுடியாது

## ப.நோ.கூ.தலைவர்கள்கூட்டத்தில்தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
நிவாரணத்துக்கு வழங்கும் அத்தியாவசியப் பொருள்களின் மீதியை ப.நோ.கூ. சங்கங்கள எந்தக் காரணம் கொண்டும் தனியார் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யக்கூடாது என்று யாழ். அரச அதிபர் மற்றும் ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டம் யாழ். மாவட்ட விவசாய உற்பத்திச் சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது.

கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் சி. மகாலிங்கம், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் எஸ். சாம்பசிவம், எஸ். நல்லையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் விவரம் வருமாறு:

★ ப.நோ.கூ. சங்கங்கள் யாழ். செயலக உணவுக் களஞ்சியத்திலிருந்து நிவாரணத்துக்கு உரிய பொருள்களைப் பெறும்பொழுது பொருள்களின் தரத்தினைப் பரிசீலனை செய்து பெற வேண்டும்.

★ ப.நோ.கூ. சங்கங்களில் மைசூர் பருப்பு சந்தைப்படுத்தப்படாமல் தேங்கியிருப்பதால் மைசூர் பருப்பு இருப்பு விவரங்களை அரச அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

★ கூட்டுறவுச் சங்கங்களில் சமாசம் வாடகைக்கு அமர்த்தியுள்ள கப்பல் மூலம் சமாசம் கொண்டுவரும் அத்தியாவசிய பொருள்களை ப.நோ.கூ.சங்கங்கள் கொள்வனவு செய்து நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.

இந்தக் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் உரையாற்றும் போது ப.நோ.கூ. சங்கங்கள் நிவாரண விநியோகத்தினை மட்டும் நம்பியிருக்கக் கூடாது இந்தப் பணி நிரந்தரமானதல்ல. எப்பொழுதும் நிறுத்தப்படலாம் ஆகவே மக்கள் நலன்களைக் கருத்தில் கொண்ட சமூக பொருளாதாரப் பணிகளில் ஈடுபட வேண்டும்.

கூட்டுறவுக் கிராமிய வங்கி சமாசம் மூலம் கடன்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையிருப்பதால் சங்கங்கள் இக்கடன்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்றார். (இ-5)

---

# ஆடு திருடும் முயற்சி தோல்வி

சுதுமலை, மார்ச் 4
திருடப்பட்ட ஆடு மீட்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் இடம் பெற்றது.

வீட்டின் மதில் மேலால் ஆட்டை வண்டிலில் ஏற்றிய வேளை ஆடு சத்தமிட்டதும் வீட்டுக்காரர் எழுந்து கூச்சலிடவே திருடர்கள் ஆட்டைக் கைவிட்டு ஓடித்தப்பினர். (இ-139)

---

# இளைஞர்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4
பளை அம்பகாமம் பகுதியில் குளத்தில் மீன்பிடிக்கச் சென்று தகவல் தெரியாதிருந்த மூன்று இளைஞர்களும் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற சமயம் காணாமற்போன இராசேந்திரன் தசிகரன், திருச்செல்வம் நிமால், ரி. பொன்ராசா ஆகியோர் படையினர் பாதுகாப்பில் இருந்தனர் என்றும்—

மூவரும் அந்தப் பகுதி கிராமசேவையாளரின் முன்னிலையில் வைத்து நேற்று விடுவிக்கப்பட்டனர்—என்றும் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் — கந்தர்மடத்தில் வைத்துப்படையினரால் கைது செய்யப்பட்ட இணுவிலைச் சேர்ந்த நாகராசா சுதர்சனும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். (இ-3-5)

---

# புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 4
ஸ்ரீ ராமகிருஷ்ணர் மற்றும் சுவாமி விவேகானந்தரின் போதனைகளைக் கொண்ட புத்தகக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீசாரதா வேசாச்சிரமம் இந்தக் கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளது. (இ-7)

---

# மயிலிட்டி மீனவருக்கு 'கியூடெக்' உதவி

வடமராட்சி, மார்ச் 4
இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து வடமராட்சிப் பிரதேசத்தில் கடற்றொழில் புரியும் மயிலிட்டித் துறையைச் சேர்ந்த மீனவர்களுக்கு உதவுவதற்காக கியூடெக் நிறுவனம் ஓர் இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு பி. எம். இம்மானுவேல் அடிகளார் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்தே மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு இந்த நிதிஉதவி கிடைத்துள்ளது.

இந்த நிதி உதவியைக் கொண்டு மயிலிட்டித் துறை மீனவர்கள் மீன்பிடி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கெனச் சுழற்சி முறைக்கடன் வழங்கப்படும்.

முதலாம் கட்டத்தில் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 20 மீனவர்களுக்கு கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்று மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உபதலைவர் ம. மரியரட்ணம் தெரிவித்தார். (இ-173)

---

# பாடசாலைகளுக்கு உருக்கு அலுமாரி

பருத்தித்துறை, மார்ச் 4
வடமராட்சிப் பகுதியில் உள்ள எட்டுப் பாடசாலைகளுக்கு உருக்கு அலுமாரிகள் வழங்கப்படவுள்ளன.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா இதனைத் தெரிவித்தார்.

விஞ்ஞான உபகரணங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு இந்த உருக்கு அலுமாரிகள் [illegible] (இ-118)

---

# கிருமிநாசனி தெளித்தவர் ஆஸ்பத்திரியில்

புகையிலைக்கன்றுக்குகிருமிநாசனி தெளித்தவர் சுயநினைவற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பெரியபுலம் வீதி, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த யேசுதாசன் ஜெபரெட்ணம் (வயது 30) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் ஆவார். (இ-167)

---

# புனரமைப்பு

நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தின் கலையரங்கு புனரமைப்புவேலைகள் விரைவில் இடம்பெறவுள்ளன.

வாடிக்கையாளரே
வெள்ளை நெற் சூ
(நதியா)
சோடி (Sodi)
ரக பாதணிகள்
குறைந்த விலையில்
கணபதி
சூ பலஸ்
159, நவீன சந்தை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(63606)

---

# கத்தோலிக்க...

(முதலாம் பக்கத் தொடர்)
29ஆம் திகதிக்குமுன் தேர்தலை நடத்தலாம் என்றும் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வதென இவர்கள் நேற்று மாலை 3-30 மணிக்கு அறிவித்தனர். அதே நேரம் பிற்பகல் 4-30 மணிக்கு சட்டமா அதிபர் தேர்தல் திகதியை பின்போடுவது தொடர்பாக மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். (இ-3-10)

---

# 1,408 பேர்...

[முதலாம் பக்கத் தொடர்]
சாலைக்கும், நீதிமன்றத்துக்கும் அனுப்பப்பட்டனர்; சிலர் இங்கேயே விடுவிக்கப்பட்டனர் என்று தடுப்பு முகாமுக்குப் பொறுப்பான பொலீஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறைக்கு நேற்றுச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக அதிகாரி எஸ். சிறீதரனிடமே மேற்கண்டவாறு பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட 991 பேர் தொடர்பான விவரங்களையும்—

1997 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட 417 பேர் தொடர்பான விவரங்களையும் — கொண்ட பட்டியல் ஒன்று சிறீதரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது,

கைதானவர் பெயர், விலாசம், கைதான இடம் போன்ற விவரங்கள் கொண்ட பட்டியலை யாழ். அலுவலகத்தில் இன்று முதல் பார்வையிடலாம் என்று சிறீதரன் தெரிவித்தார்,

இந்தப் பட்டியலில் உள்ளவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டிருக்கலாம் அல்லது காணாமற் போனோர் பட்டியலில் இடம் பெற்றிருக்கலாம் எனக் கூறப்பட்டது. (இ-3-7)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-03-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org